விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 05 வியாழக்கிழமை (21.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 337

## சஜித் இன்று விசேட ஊடகவியலாளர் சந்திப்பு

### மக்களையும் சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

சஜித் பிரேமதாச விசேட ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை இன்று நடத்தவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித் 23


## சீனத்தூதுவருடன் மகிந்த பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதுவர் சேங் ஷி யூ ஹாங், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை கொழும்பில் உள்ள அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.


இந்த சந்திப்பு நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன வெற்றி பெற்றமைக்கு சீனத் தூதுவர், எதிர்க்கட்சித் தலைவரிடம் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டதாக எதிர்க்கட்சித் 23



# இடைக்கால அரசு

# இன்று பதவியேற்கும்



## புதிய பிரதமராக மகிந்த பதவியேற்கிறார்

(கொழும்பு)

புதிய 15 பேர்கொண்ட அமைச்சரவையுடன் இடைக்கால அரசை இன்று நிறுவுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் புதிய பிரதமராக மகிந்த இன்று பதவியேற்கவுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

ஹக்கீம், ரிஷாத்துக்கு

## புதிய அரசில் இடமில்லை

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் அமைக்கப்படவுள்ள அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கோ, அகில இலங்கை மக்கள் 23

ரணில், மகிந்தவுடன்

## ஜெய்சங்கர் சந்தித்து பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு நேற்று முன்தினம் இரவு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் 23

## பாணின் விலை 5 ரூபாயால்

இன்று முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

450 கிராம் நிறையுடைய பாண் ஒன்றின் விலை 5 ரூபாயால் அதிகரிக்கப்படுவதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் அறிவித் 23

## ஜனநாயகத்தை மதிப்பதால் கோத்தாவின் புதிய அரசை அமைக்க இடமளித்துள்ளேன்

### பதவி விலகிய பின் ரணில் விசேட அறிக்கை

(கொழும்பு)

ஜனநாயகத்தை நான்விரும்புகின்றேன். அதற்கு மதிப்பளிக்கின்றேன். ஜனநாயக முறைப்படியே செயற்படுவேன்.

எனவே புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ புதிய அரசை அமைப்பதற்கு வாய்ப்பளித்து, பிரதமர் பதவியிலிருந்து விலகிச் செல்வதற்குத் தீர்மானித்திருக்கின்றேன்.

இதுகுறித்து இன்றைய தினம் ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பேன். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் 23

## மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் உரிமைக்காக தமிழீழ இலட்சியத்துக்காகப் போராடி வீரச்சாவடைந்த வீரமறவர்களை நினைவுகூரும் மாவீரர் நினைவேந்தல் வார நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகின்றன. (ம-3)

## முல்லைத்தீவில் வெடிமருந்துடன் இளைஞன் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் கிராமத்தில், கடத்தலுக்கு தயாரான நிலையில் இருந்த 52 கிலோ 800 கிராம் எடையுள்ள வெடிமருந்து நேற்று முன்தினம் சிறப்பு அதிரடி 23

## அனைத்து ஆளுநர்களும் இராஜினாமா செய்க



### ஜனாதிபதி கோத்தா அறிவுறுத்தல்

(கொழும்பு)

வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் உட்பட அனைத்து ஆளுநர்களையும் தங்கள் பதவிகளில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார். 23

வெளிநாட்டுப் பயணங்களுக்கு

## அரச உத்தியோகத்தர்களுக்கு இடைக்காலத் தடை - ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைய அரச உத்தியோகத்தர்கள் அரச அனுசரணையுடன் வெளிநாடுகளுக்கு பயணமாவதை இடைநிறுத்தியுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர பணித்துள்ளார்.

அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் மாகாண 23

## சைக்கிள் மீது கார் மோதியதில் குடும்பத்தலைவர் உயிரிழப்பு

### கொக்குவிலில் நேற்றிரவு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியில் பயணித்த குடும்பத்தலைவர் ஒருவரை பின்னால் பயணித்த கார் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் கொக்குவில் சந்திக்கு அண்மையாக நேற்று இரவு 9.00 மணியளவில் 23

## தேர்தலில் சஜித்தின் தோல்விக்கு நாங்களும் ஒரு காரணம் தான்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(கொழும்பு)

மேடை போட்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டது சஜித் பிரேமதாசவின் தோல்விக்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில், சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு அறிவித்துவிட்டு பேசாமல் 23

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தில் 1983ஆம் ஆண்டு பிறந்த ரோகிணி நட்சத்திரம், கிரகபாவம் 16, இடபராசி 1ம் பாதம் 10இல் சூரியன் செவ்வாய் உடைய, தனியார் வர்த்தக நிலையத்தில் பணியாற்றும் மணமகனுக்கு மணமகள் தேவை.

(765)

தொடர்புகளுக்கு:-

077 0634 154


## யாழ்.பேதனாவில்

# கைத்தொலைபேசி திருடியவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் வயிற்று வலி என அனுமதிக்கப்பட்ட இளம் யுவதி ஒருவர் தொடர்ச்சியாக திருட்டுக்களில் ஈடுபட்ட நிலையில் நேற்றைய தினம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மன்னாரைச் சேர்ந்த குறித்த யுவதி வைத்தியசாலை விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களின் கைத்தொலைபேசிகள் பலவற்றை திருடிய நிலையில் இவ்வாறு பிடிபட்டுள்ளார்.

குறித்த யுவதியை யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ம-3,10)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### கருணாமூர்த்தி விஜயகாந்தன்

எமது கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவரும் மாசேரி சனசமூக நிலையத்தின் தலைவரும் வரணி பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளரும் மாசேரி சிவில் பாதுகாப்பு குழுத் தலைவரும் தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினரும் கிளைக்குழுவின் செயலாளருமாகிய திரு.**கருணாமூர்த்தி விஜயகாந்தன்** முழுத் தீவுக்குமான ஒரு சமாதான நீதிவானாக கடந்த 20.11.2019 செவ்வாய்க்கிழமையன்று மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி **அன்னலிங்கம் பிரேமசங்கர்** முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் மேன்மேலும் பதவிகளைப் பெற்று மக்களுக்கு சமூக சேவையாற்ற வேண்டும் என மனதார வாழ்த்துகின்றோம்.

பாராட்டுவோர்:-
மாசேரி வாழ் மக்கள்

(1128)



## மருந்தகங்களில் வேலைவாய்ப்பு
### கற்கைநெறி ஆரம்பம்

1. மருந்தியலாளர்கள் பரீட்சைக்கான கல்வி ஆரம்பம் 23.11.2019ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 (தகுதி - G.C.E A/L விஞ்ஞான பாடங்களில் இரசாயனம் உட்பட மூன்று பாடங்களில் சாதாரண சித்தி)
2. Certificate in Pharmacy - ஆறு மாத கால கற்கைநெறி - 23.11.2019ஆம் திகதி சனிக்கிழமை மாலை 1 மணிக்கு (தகுதி – G.C.E O/L இல் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சாதாரண சித்தி)
3. Pharmacy Technicians (NVQ Level - 04) கற்கைநெறி – 24.11.2019ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 (தகுதி – ஆங்கில மருந்தகங்களில் தொடர்ந்து குறைந்தது நான்கு வருடங்கள் பணிபுரிந்து கொண்டிருத்தல்)

கற்கைநெறி நடைபெறும் இடம்:
யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரிப் பட்டப்படிப்பு),
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:- நேரு Sir, 077 316 4251 (1127)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### துரைராசா மோகனராஜ்

{SLPS III, BA (Hons), Med, PGDE, PGDSNE}

எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி அதிபர் சேவை தரம் III இல் பதவியுயர்வு பெற்றமையினையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

(1123)


# மரண அறிவித்தல்



திருமதி

## செல்லாச்சி சோதிலிங்கம்

மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தலையாழி வைரவர் கோவில், கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லாச்சி சோதிலிங்கம் அவர்கள் நேற்று (20.11.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சோதிலிங்கத்தின் அன்பு மனைவியும் ஸ்ரீகாந்தன், அப்பு ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி பூ ஸ்ரீகாந்தன், அன்புமலர், நவநீதரம்பை ஆகியோரின் அன்பு மாமியாரும் ஷர்மிளா, தசாந்தன், கிருஷ்ணகுமார் ஆகியோரின் பேத்தியும் காலஞ்சென்ற வியாழம்மா, சின்னத்தங்கம், சுப்பையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோதியம்மா, காலஞ்சென்ற சறோஜினிதேவி, சுசீலாமணிதேவி மற்றும் வனிதாமணி தேவி, யாழினிதேவி ஆகியோரின் சிறிய தாயாரும் சோதியம்மாவின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2019) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

39/15, அச்சுகூட வீதி,
தலையாழி, கொக்குவில்.

தகவல்:- ஸ்ரீகாந்தன், அப்பு
0775544941, 0769247626

(1122)

# யாழில் ஒக்டோபர், நவம்பரில் மட்டும் 1557 பேர் டெங்கு நோயால் பாதிப்பு!

## இருவர் உயிரிழப்பு; சுகாதார சேவைகள் பணிமனை அதிர்ச்சித் தகவல்

## அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாத நடுப்பகுதி வரை 1557 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதோடு இருவர் உயிரிழந்ததாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அதிர்ச்சித் தகவலை வெளியிட்டது.**

யாழ்.குடாநாட்டில் பெய்த அடைமழை காரணமாக டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்த வருடம் இதுவரை யாழ். மாவட்டத்தில் மட்டும் 3 ஆயிரத்து 854 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டதுடன் கடந்த ஒக்டோபர் மாதம் 537 பேரும் இம்மாதம் நடுப்பகுதிவரை 1020 பேர் இனம் காணப்பட்டனர்.

டெங்கு நோய் தொடர்பில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்டத்திலுள்ள பிரதேச சுகாதார பணிமனைகளுக்கும் டெங்கு நோய் முன்னெச்சரிக்கை தொடர்பில் சகல அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் பொதுமக்கள் அனைவரும் டெங்கு நோய் தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் இருப்பதுடன் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தல்களை உரிய முறையில் பின்பற்றுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (இ-10)

# சஜித்தின் பிரசார நிதி வீண்விரயம்; திஸ்ஸவே பொறுப்பு - அகிலவிராஜ்



(கொழும்பு)

சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பிரசார நிதி வீண்விரயம் செய்யப்பட்டிருந்தால் அது குறித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவிடமே விளக்கம் கோரவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக கட்சியின் தலைமை நிர்வாகிகளால் போதியளவான நிதி பெற்றுக்கொள்ளப்பட்டதா?, அவை முறையாக ஒதுக்கப்பட்டதா?, அநாவசியமான செலவுகள் மேற்கொள்ளப்பட்டதா? என்பது உள்ளிட்ட பல கேள்விகள் தற்போது எழுந்துள்ளன.


அவையும் சஜித் பிரேமதாஸவின் தோல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தியதாக நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் நளின் பண்டார குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் நேற்று புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பிரசாரத்துடன் தொடர்புடைய முக்கிய விவகாரங்கள் அனைத்தும் கொழும்பு வொக்ஷோல் வீதியில் அமைந்துள்ள பிரசாரக் காரியாலயத்திடமே பொறுப்பளிக்கப்பட்டிருந்தது.

அதன் பிரதான ஒருங்கிணைப்பாளராக திஸ்ஸ அத்தநாயக்கவே பெயரிடப்பட்டிருந்தார். எனவே சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பிரசார நிதி வீண்விரயம் செய்யப்பட்டிருந்தால் அதுகுறித்து அவரிடமே விளக்கம் கோரவேண்டும்" என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# மைத்திரிபாலவுக்கு ஜனாதிபதி நன்றி



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த சில வருடங்களில் நாட்டுக்கு ஆற்றிய சேவைக்கு எனது கௌரவமான நன்றியைத் தெரிவிக்கின்றேன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்துகொண்டார்.

இந்நிலையில் டுவிட்டர் பதிவிலேயே ஜனாதிபதி இந்த விடயத்தை குறிப்பிட்டிருந்தார்.

" இந்த நாட்டின் ஏழாவது ஜனாதிபதி என்ற வகையில் எனது கடமைகளை ஜனாதிபதி செயலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார். முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவின் பங்களிப்புடன் இந்நிகழ்வு நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த சில வருடங்களில் நாட்டுக்கு ஆற்றிய சேவைக்கு எனது கௌரவமான நன்றியை தெரிவிக்கின்றேன்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் ஏழாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கோட்டாவுக்கு விடுத்துள்ள அழைப்பை இந்திய அரசு திரும்பப் பெற வேண்டும்

## திருமாவளவன் வலியுறுத்து

## சென்னையில் 23 ஆம் திகதி ஆர்ப்பாட்டத்திற்கும் அழைப்பு



(சென்னை)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விடுத்துள்ள அழைப்பை இந்திய அரசு திரும்பப் பெற வேண்டுமென விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் வலியுறுத்தினார்.

இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர், "இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார். அவரை இந்தியாவுக்கு வருமாறு இந்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

அதை ஏற்று அவர் 29 ஆம் திகதி டில்லி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்திய அரசு தனது அழைப்பைத் திரும்பப்பெறவேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் வலியுறுத்துகின்றோம்.

தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விடுத்துள்ள அழைப்பை இந்திய அரசு திரும்பப் பெறவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி சென்னையில் நாளை மறுதினம் 23 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் எனத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் அனைவரும் திரளாக பங்கேற்க வேண்டும்" என அவர் அழைப்பு விடுத்தார். (இ-7)

# கொழும்பில் மீண்டும் காற்று மாசு அதிகரிப்பு

## மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பு நகரை அண்மித்த வளிமண்டலத்தில் காற்று மாசு மீண்டும் அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்தது.

கொழும்பு நகரில் நேற்றுப் புதன்கிழமை காலை காற்றில் 150 புள்ளியாக தூசு துகள்களின் தரச்சுட்டி காணப்பட்டதாக அந்த நிறுவகத்தின் சிரேஷ்ட புவிச்சரிதவியல் நிபுணர் சரத் பிரேமசிறி தெரிவித்தார்.

காலை 6 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரையான காலப்பகுதியில் இந்த நிலை காணப்பட்டதாக அவர் கூறினார். இந்தக் காலப்பகுதியில் வாகன போக்குவரத்து அதிகரித்தமையும் இதற்குக் காரணம் என சரத் பிரேமசிறி தெரிவித்தார். (இ-7)

# பங்களாதேஷ் பிறீமிய லீக் ரி-20; இலங்கை அணி வீரர்கள் 5 பேர் தெரிவு

இந்த ஆண்டு டிசம்பர் மாதம் பங்களாதேஷில் இடம்பெறவுள்ள பங்களாதேஷ் ப்ரீமியர் லீக் 'ருவென்டி 20' கிரிக்கெட் தொடரின் வீரர்கள் ஏலம் கடந்த 17 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்து நடாத்தும் இந்த பங்கபந்து பி.பி.எல் 'ருவென்டி 20' கிரிக்கெட் தொடரில் 7 அணிகள் பங்குபெறுகின்றன. பங்கபந்து பி.பி.எல் (டீமீடு) 'ருவென்டி 20' தொடர், பங்களாதேஷ் கிரிக்கெட் சபை ஏற்கனவே நடாத்திய பி.பி.எல் (டீடு) 'ருவென்டி 20' கிரிக்கெட் தொடர்களை விட வித்தியாசமான முறையில் நடைபெறவிருக்கின்றமை முக்கிய அம்சமாகும்.

இந்நிலையில் இத்தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் 439 வெளிநாட்டு வீரர்கள் அடங்கலாக மொத்தமாக 620 கிரிக்கெட் வீரர்கள் விண்ணப்பித்திருக்கின்றனர்.

எனினும் வீரர்கள் ஏலத்தில் வெறும் 33 வெளிநாட்டு வீரர்களே தொடரில் பங்கெடுக்கும் 7 அணிகளினாலும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளனர். அதில் இலங்கையைச் சேர்ந்த 5 கிரிக்கெட் வீரர்கள் உள்ளடங்குவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தசுன் ஷானக்க மற்றும் குசல் பெரேரா போன்ற அதிரடி துடுப்பாட்ட வீரர்கள் கொமில்லா வோரியர்ஸ் அணிக்காக ஆடவிருக்கின்றனர்.




அதேநேரம், அவிஷ்க பெர்னாந்து சட்டொக்ரம் சேலஞ்சர்ஸ் அணியினால் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றார்.

இதேவேளை, இலங்கை 'ருவென்டி 20' அணியின் முனனாள் தலைவரான திசர பெரேரா, டாக்கா பிளாட்டூன் அணிக்காக ஆடவிருக்கின்றார். சுழல்பந்து சகலதுறை வீரரான ஜீவன் மெண்டிஸ் சில்லட் தண்டர்ஸ் அணிக்காக விளை யாடவிருப்பது குறிப்பிடத்தக்கது.


## கண்ணீர் அஞ்சலி

திருமதி **வேலாயுதபிள்ளை கதிரநாயகி**



எமது சங்கத்தின் மூத்த அங்கத்தவரும், கொடிகாமம் கிராமிய சித்த வைத்தியசாலையின் மருத்துவ பொறுப்பதிகாரியுமான மருத்துவர் **திருமதி ஜெ.கனகேஸ்வரி** அவர்களின் அன்புத்தாயார்.

திருமதி **வேலாயுதபிள்ளை கதிரநாயகி** அவர்களின் பிரிவுத் துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1129) **அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை**

## கண்ணீர் அஞ்சலி



எமது நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்
திருமதி **வசந்தி சுகந்தன்**
அவர்களின் பாசமிகு தாயாரான
அமரர் **புவனேஸ்வரி இராமச்சந்திரன்**
அவர்கள் 19.11.2019 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உத்தியோகத்தர்கள்,**
**கமநலசேவை நிலையம்,**
**மற்றும் கமநல சேவைக்குழு,**
**உறுப்பினர்கள்.**

(C-8280)

## 29 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 06 . 10 . 1927
இறப்பு 23 . 11 . 1990

அமரர் **சண்முகம் ஞானப்பிரகாசம்**

சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஸ்தாபகரும் இணைப்பதிகாரியுமாகிய ஓய்வு பெற்ற சிரேஸ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் **அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்** அவர்களின் சேவையினை நன்றியுடன் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தலைவர்,பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள்,**
**சமூக அபிவிருத்தி மன்றம்**

276,அரசடி வீதி,
கந்தர்மடம்,யாழ்ப்பாணம்
(1130)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **நாகலிங்கம் சிவகுருநாதன்(அப்பு)**

(பிரபல புகையிலை வர்த்தகர்,மண்டைதீவு)

பிறப்பு 12.12.1944 இறப்பு 02.12.2018

திதி – தேய்பிறை தசமி

பெற்றீர்கள் வளர்த்தீர்கள் பெருமையுடன் பார்த்தீர்கள்
சுற்றம் எல்லாம் போற்றிடவே எம்மை
சொகுசாக வாழ வைத்தீர்களே –அப்பா
வாசல் தேடி வந்தோரை வரவேற்று புன்னகைப்பீர்கள்
ஆண்டு ஒன்று கடந்தாலும் உங்கள் பிரிவின் துயர்
ஆறவில்லையே

உடன் பிறப்புக்கு உற்ற சகோதரனாய்
மனைவிக்கு ஏற்ற அன்புக் கணவனாய்
பிள்ளைகளிற்கு அன்பு அப்பாவாய்
எந்தவிடத்து எந்த வகை வேண்டுமென சிந்தித்து
அந்தவிடத்து அந்த வகை ஆளுமையோடு உதித்தெழுந்த சூரியனே!

என்றும் உங்கள் ஆசீர்வாதத்தில்
நித்தம் எம் பணி தொடர்கின்றோம்.

இறம்பைக்குளம்,
வவுனியா

குடும்பத்தினர்

1131

# தலதாமாளிகையில் ஜனாதிபதி கோட்டா வழிபாடு






(கண்டி)

புதிய ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்த, நிறைவேற்றதிகாரம் கொண்ட இலங்கையின் 7ஆவது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

நேற்றுக் காலை கண்டி தலதா மாளிகைக்குச் சென்ற புதிய ஜனாதிபதி கோட்டாபய தலதா மாளிகையின் தியவடன நிலமே பிரதீப் நிலங்கவால் வரவேற்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து இலங்கையிலுள்ள உயரிய பௌத்த ஸ்தலமான. தலதா மாளிகையில் மத அனுஷ்டானங்களை மேற்கொண்டார். (இ-7)




## நீர் நிலைபோல் காட்சி தரும் கோபால் வீதிக்கு வடிகாலமைப்பு சீரமைத்துத் தரப்படுமா?



யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட கோபால் ஒழுங்கை காங்கேசன்துறை வீதியில் இருந்து பிரப்பங்குளம் வீதி வரை செல்லும் 250 மீற்றர் நீளமான ஒழுங்கையாகும். இவ் ஒழுங்கையில் யாழ். மாவட்ட சாரணர் தலைமைக்காரியாலயம் VCM தனியார் கல்வி நிலையம், களஞ்சியம்என்பன அமைந்துள்ளன.

இவ் ஒழுங்கையால் தினமும் பாடசாலை மாணவர்கள், சாரணர்கள், தனியார் கல்வி நிலைய மாணவர்கள், அரச,தனியார் உத்தியோகத்தர்கள் எனப்பலரும் பயணித்து வருகின்றனர். வீதி வடிகால் அமைப்பு சீர் செய்யப்படாததால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி நின்று பயணிக்க முடியாத அளவிற்கு அசௌகரியத்திற்கு உள்ளாக வேண்டியுள்ளது.

எனவே இவ் ஒழுங்கையின் வீதி வடிகாலமைப்பை சீர் செய்து தருமாறு மாநகர சபை முதல்வர் உறுப்பினர்களை நாம் கோரி நிற்கின்றோம்.

**(பாதிக்கப்பட்ட மக்கள்)**

## கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2020 ஆம் ஆண்டிற்கான கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பயில விரும்புவோர் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் தொழில்நுட்பவியல் கல்லூரி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு தொழில் நுட்பக்கல்லூரியுடன் அல்லது 021 221 2403 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளுமாறும் மேலும் கட்டட நிர்மாணத் துறை சம்பந்தமான பல்திறன் கைப்பணியாளர் நிர்மாணிப்பு (Multi Skills) எனும் கற்கை நெறியும் போதிய விண்ணப்பங் கள் கிடைக்கப்பெறும் நிலையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவி க்கப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறியில் Plumbing - குழாய் பொருத்துதல், Elect rical - மின் தொழில் நுட்பவியல், Aluminium Fabrication - அலுமினியம் பொருத் துதல், Wood Work - மர வேலை தொழில்நுட்பம், Air Condition Technoligy - வாயு சீராக்கல் நுட்பம், Construction Technology -கட்டு மான நுட்பவியல் ஆகிய பாடப் பரப்புகள் உள்ளடங்கும்.

இதில் முற்றிலும் இலவசமான கற்கை நெறிகள், மாதாந்தம் ஆயிரம் ரூபா உதவு தொகை, போக்கு வரத்து பருவகால சீட்டு, இக் கற்கை நெறியை பயிலும் பெண் களுக்கான விசேட கொடுப்பனவுகள் என் பனவும் வழங்கப்படும் என தொழில் நுட்பவியற் கல்லூரிப் பணிப் பாளர் அறிவித்துள்ளார்.(இ-5)

## மணிவிழாவும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி. கமலராணி கிருஷ்ணபிள்ளையின் சேவை நலன் பாராட்டு விழாவும் (மணிவிழா) "கமலம்" மலர் வெளியீடும் நாளை 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை9.45 மணியளவில் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில், உப அதிபர் திருமதி உமாவதிரவிபரன் தலைமையில் நடைபெறும்.(இ-5)

## அடிக்கல் நாட்டலும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலையின், புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டலும், சிறுவர் தின நிகழ்வும், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நாளை 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன. இதில் காலை 7 மணியளவில் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டலும், பிற்பகல் 3 மணியளவில் மற்றைய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (இ-5)


## மரண அறிவித்தல்

## தங்கராணி பசுபதி (குஞ்சு)



தோற்றம்: 20-08-1958
மறைவு: 18-11-2019

அராலி வடக்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட தங்கராணி பசுபதி(குஞ்சு) அவர்கள் 18.11.2019 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற வைத்தி-அன்னம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மாணிக்கம்-ஆச்சிப்பிள்ளையின் பாசமிகு மருமகளும், பசுபதியின் அன்பு மனைவியும் சோபனா, சசிரேகா, பிரசாத், தர்சிகா, லோசனா ஆகியோரின் பாசமிகு தாயாரும் லோகேஸ்வரன், நிரோசன் ஆகியோரின் மாமியாரும் அர்வின், ஆத்விக் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்ற கந்தையா, வள்ளியம்மை மற்றும் தறுமு, இராசகிளி, இரத்தினம், சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் நல்லம்மா, மலர், நேசமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக 21.11.2019 இன்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி,
நல்லூர். (1117)

தகவல்: மா.பசுபதி(கணவன்)
குடும்பத்தினர்.

# கனவுகளும் பலன்களும்

## கனவுகளின் பலன்கள்

கனவுகள் தூங்கும் போது நகரும் படக் காட்சிகள் போலத் தோன்றுவதால் அவை மிகப் பழங்காலத்திலிருந்தே மனிதர்களின் சிந்தனையைக் கவர்ந்து வந்துள்ளன.

எனவே கனவு என்றால் என்ன என்பது பற் றியும் அது எப்படி ஏற்படுகிறது என்பது பற்றியும் மிகப் பழங்காலத்திலிருந்தே மனிதர்கள் சிந்தித்து வந்துள்ளனர்.

கனவுகள் வாழ்க்கையில் நடந்தது அல்லது நடக்கப் போவது எதைப் பற்றி யாவது குறிக்கிறதா என்பது பற்றியும் அவர்கள் சிந்திக்கத் தவறவில்லை. உண்மையில் பெரும்பாலான மக்கள் கனவுகளுக்கு பிரத்தியேகப் பலன்கள் இருப்பதாக முழுமையாக நம்பத் தொடங்கினர்.

கனவுகளின் பலன்களைப் பொறுத்த வரையில் இரவில் தூங்கும் போது காணப்படும் கனவுகள் மட்டுமே பலிக்கும் என்பது ஒரு பொதுவான கருத்து. பகலில் தூங்கும் போதும் கனவுகள் தோன்றுகின்றன. இவற்றைப் பகல் கனவு என்பர். பகல் கனவுகள் பலிக்காது என்பது ஒரு பொதுவான கருத்து.

வைகறையில் காணும் கனவு அதாவது விடிவதற்கு சற்று முன்பு அதாவது நான்கு மணியிலிருந்து ஐந்து மணிக்குள் காணும் கனவு உடனே பலிக்கும்.

முன் இரவில் காணப்படும் கனவு சில மாதங்களில் பலிக்கலாம். இவை கனவைப் பற்றிய நமது முன்னோர்களின் நம்பிக்கைகள்.

கனவுகளுக்கு நேரடியாகப் பொருள் கொள்ளக்கூடாது என்பதும் கனவுகளின் பலன்கள் குறிப்பால் உணர்த்தப்படுகின்றன என்பதும் ஒரு பொதுவான கருத்து. எடுத்துக்காட்டாக யானையைக் கனவில் கண்டால் அது நல்ல பலனைக் கொடுக்கும். ஆனால் கனவில் அந்த யானை என்ன செய்வதாகத் தோன்றுகிறதோ அந்தச் செயலுக்கேற்ப கனவின் பலன் மாறுபடும்.

சில கனவுகள் ஒருவருடைய எதிர்காலத்தில் நடக்கப் போவதைத் தெரிவிப்பதாகக் கருதப்படுகிறது. பொதுவாக நல்ல கனவுகள் நல்ல பலன்களையும் தீய கனவுகள் தீய பலன்களையும் தருகின்றன.

ஆனால் சில சமயங்களில் நல்ல கனவுகள் தீய செய்தியையும் தீய கனவுகள் நல்ல செய்தியையும் தெரிவிப்பதாக அமைவதும் உண்டு.

நல்ல பலன் அளிக்கும் கனவுகளைக் கண்டால் மீண்டும் உறங்கக் கூடாது. தீய கனவுகளைக் கண்டால் இறைவனை மனமார வணங்கி விட்டு உறங்கிவிட வேண்டும். விழித்தெழுந்த பின்னர் நினைவில் நிற்பவை பலிக்கும் என்பது கனவைப் பற்றிய நமது முன்னோர்களின் கருத்து.

# அதிபர் பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்தில் எதிர்வரும் 23.12.2019 ஆம் திகதியன்று வெற்றிடம் ஏற்படவுள்ள யா/வதிரி திரு இருதயக் கல்லூரியின் (வகை - III) அதிபர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- இலங்கை அதிபர் சேவையில் தரம் 2, 3 தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.
- இலங்கை அதிபர் சேவையில் அதிபராக கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். (இவர்களுக்கு பிரிவு 4 பொருத்தமாகாது)
- வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.
- இலங்கை அதிபர் சேவை தரம் 2 ஐச் சேர்ந்தவர்களது பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் மாத்திரம் தரம் 3 ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 29.11.2019 ஆகும்.
- விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்கு தோற்றுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (இ-5)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்




(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த யோகலிங்கம் ஜெயகாந்த் அகில் இலங்கை சமாதான நீதவானாக நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (இ-10)

## பயிலுநர்கள் பணிக்கு அமர்த்தல்;

# செயலாளர் அனுமதித்தால் மட்டுமே நியமனம் வழங்க முடியும்



(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுடன் பயிலுநர்களாக ஒப்பந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களைப் பணிக்கு அமர்த்துவதாயின் துறைசார் அமைச்சின் செயலாளர் அனுமதிக்க வேண்டும். அவ்வாறு அனுமதித்தால் மட்டுமே நியமனம் வழங்க முடியும் என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் இடம் பெற்ற குறித்த நேர்முகத் தேர்வில் சுமார் 7 ஆயிரம் பேர்வரை தெரிவு செய்யப்பட்ட நிலையில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலைக் காரணம் காட்டி தேர்தல்கள் ஆணைக்குழு தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பணித்து ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் குறித்த நியமனத்திற்கான அனுமதி வழங்கப்பட்டது. எனினும் நிர்வாக ரீதியான குறித்த நியமனத்துக்கான அனுமதியை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சு வழங்கினால் மட்டுமே குறித்த நியமனத்தை உறுதி செய்ய முடியும்.

எனவே குறித்த விடயம் தொடர்பில் அமைச்சின் செயலாளருக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட நிலையில் அனுமதி வழங்கப்பட்டால் நியமனம் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# அனுமதி அட்டைகளை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் (2019) 2ஆம் தடவையாக தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ள வரும் போது தேசிய அடையாள அட்டையுடன், பாடசாலைச் சீருடையுடன் வருமாறு அதிபர் எம்.ஞானசம்பந்தன் அறிவித்தார். (இ-5)

# இராசி பலன்

21.11.2019

கார்த்திகை 05, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

நவமி முற்பகல் 9.32 மணிவரை

பூரம் பிற்பகல் 5.12 மணிவரை

சுபநேரம் 7.40-9.10 மணிவரை

இராகுகாலம் 1.40-3.10 மணிவரை

வளவன்

கிரகநிலை

ராகு

சந்

சனி, கேது, குரு

சூரி, சுக்

செவ், புத

சந்திராஷ்டமம்

அவிட்டம், சதயம்

**மேடம்:** சுய முற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி சேமித்து வைக்க நினைப்பீர்கள், பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**இடபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரும், வாகன சுகமுண்டு, பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம்காணும் நாள், உறவுகளின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், வழிபாட்டு சிந்தனை மேலோங்கும், போசன சுகமுண்டு.

**கன்னி:** தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**துலாம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பம் கூடும்நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** விருந்தினர் வருகையுண்டு, தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

**தனுசு:** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் ரீதியாக முக்கிய நபர்களைச் சந்திப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், செய்தொழிலில் அவதானத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கும்பம்:** குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன நன்மையுண்டு.

**மீனம்:** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், நல்லவர்கள் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

## சமூக வலைத்தளங்கள் தவறாகப் பயன்படுத்தல் 1593 முறைப்பாடுகள்

(கொழும்பு)

கடந்த மாதம் 7 ஆம் திகதி முதல் இம்மாதம் 16 ஆம் திகதி வரை 2019 ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக, சமூக வலைத்தளங்களை தவறாகப் பயன்படுத்தியமை குறித்து 1593 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை தகவல் தொழில்நுட்ப சங்கம் (ITSSL) தெரிவித்தது.

ஜனாதிபதி வேட்பாளர்களை அவமதித்ததாக 650 முறைப்பாடுகளும், வேட்பாளர்கள் குறித்து தவறான தகவல்கள் பரப்பப்பட்டதாக 147 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டதாக அந்தச் சங்கம் தெரிவித்தது.

இதேவேளை, மிலேனியம் சவால்கள் ஒப்பந்தத்துடன் தொடர்புடைய தவறான தகவல்கள் தொடர்பாக 142 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

தபால்மூல வாக்களிப்பில் புள்ளடியிட்ட வாக்குச் சீட்டைப் படம் பிடித்த 37 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கையின் தகவல் தொழில்நுட்ப சங்கம் தெரிவித்தது.

1,593 முறைப்பாடுகளில் ஜனாதிபதி வேட்பாளர்கள் பெயரில் 8 போலிக்கணக்குகளும் உள்ளன் என்று அந்தச்.சங்கம் மேலும் தெரிவித்தது. (இ-7)

# மக்கள் ஆணைக்கு மதிப்பளித்தாலும் கோட்டாபயவை ஏற்கப்போவதில்லை!

## வெல்கம திட்டவட்டம்



(கொழும்பு)

**நாட்டு மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளமையை மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து ஏற்றுக் கொள்கின்ற போதிலும், அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலைப்பாட்டில் தான் உறுதியாக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.**

கடந்த காலங்களில் நான் அவர் மீது வெளியிட்ட அதிருப்தி நிலைப்பாட்டிலிருந்து மாறவில்லை. என்னுடைய அந்த முடிவில் நான் உறுதியாக இருக்கின்றேன். இதற்கான காரணங்கள் ஏற்கனவே பல முறை என்னால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் தற்போதைய அரசியல் சூழ்நிலைகளை நன்கு அவதானித்து எமது அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடரும்.

அரசியலமைப்பின் படி அடுத்த வருடம் மார்ச் மாதம் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது. அது குறித்து எமது நிலைப்பாடு என்று எதுவும் இல்லை.

எனினும் அதற்கு முன்னர் பாராளுமன்றத்தை கலைப்பதென்றால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறப்பட வேண்டும்.

2020 மார்ச் மாதத்துக்கு முன்னர் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கோரப்பட்டால் அதற்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்பது குறித்து ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்தாலோசித்தே தீர்மானிக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் சூட்சுமமான திருட்டுக்கள்

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் நோயாளர்களின் உடைமைகளை மிக அவதானத்துடன் பேணுமாறு பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரி.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வைத்தியசாலையில் நோயாளர்களாகத் தம்மை அடையாளப்படுத்தி வரும் சிலர் தமது விடுதிகளிலும் ஏனைய விடுதிகளிலும் சூட்சுமமான முறையில் திருட்டுக்களில்ஈடுபட்டு வருகின்றனர். யாழ். போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் நோயாளர்கள் அதிகரித்துள்ள நிலையில்நோயாளர்கள் மற்றும் பராமரிப்போர் தமது உடைமைகளைப் பாதுகாப்புடன் வைத்திருக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார். (இ-10)



# இனவாதத்தை முன்னிறுத்தி தொடர்ந்தும் ஆட்சியை முன்னெடுக்க முடியாது -மனுஷ



(கொழும்பு)

நாட்டில் சிங்கள பௌத்தத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக எதிரணியினரால் மாயை ஒன்று உருவாக்கப்பட்டு. அதனூடாக அவர்கள் தேர்தலில் வெற்றியடைந்திருக்கிறார்கள்.

ஆனால் இனவாதத்தை முன்னிறுத்தி நாட்டில் தொடர்ந்தும் சிறந்த ஆட்சியொன்றை முன்னெடுக்க முடியாது என்பதை நினைவில்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவின் இல்லத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா:12<br>உயரம்:165 cm<br>தகைமை/தொழில்: அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ: B/10026 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'2"<br>கி.பா: 1 இல் செவ்.<br>தகைமை/தொழில்:ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்,தனியார்<br>தொ.இ: G/10093 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 7 இல் சூரி,செவ்<br>உயரம்:- 5' 7"<br>தகைமை/தொழில்: (A/L) Medical Rep<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,வங்கி<br>தொ.இ: B/10028 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா:68 சூரி,செவ்.1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் :சுவிஸில் உயர் தொழில் செய்பவர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/10094 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா:13 ½ 6 இல் சூரி, செவ்.<br>உயரம்:6'<br>தகைமை/தொழில்:Civil Engineering pass<br>கிராமிய அபிவிருத்தி திணைக்களம்<br>எதிர்பார்ப்பு: தனியார்,அரசதொழில் விருப்பத்தக்கது<br>தொ.இ: B/10029 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 1<br>கி.பா: 44 ½ 4 இல் செவ்.<br>உயரம்: 5'2"-<br>தகைமை/தொழில்:பாராளுமன்ற கன்செட் அறிக்கையாளர்<br>தொ.இ: G/5702 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2 ஆம் பாதம்<br>கி.பா:10 ½<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:கடையில் பணியாளர்<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ: B/10030 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:-30 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தொழில்/தகைமை:BA(வெளிவாரி பேராதனை)<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் வங்கி பொறியியலாளர், வைத்தியர், கல்வித் திணைக்களம் (உதவிக் கல்விப்பணிப்பாளர், விரிவுரையாளர் அல்லது வெளிநாடு (கனடா,U.K)<br>தொ.இ: G/5711 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

**★ இறுதி இரண்டு வாரத்தில், ஐ.தே.கவின் சில முன்னணியா ளர்கள், மாற்று அணியுடன் இரகசிய உறவு கொண்டனர். இவர்கள் வெறுக்கத்தக்க கீழ்த்தர மனித மிருகங்கள். ஒருபுறத்தில் உயிரைக் கொடுத்து நாம் போராடும் போது உள்ளேயே இருந்தபடி துரோகம் செய்பவர்களை என்னவென்று சொல்வது? என்ன இனம், என்ன மதம் என்றாலும் இவர்கள் ஒன்றுதான். இந்த மனிதர்களை, "நாய்கள்" என்று சொல்ல நான் விரும்பவில்லை. ஏனென்றால் "நாய்" எனக்குப் பிடித்த ஒரு "மனிதன்"**



# சஜித்தின் தோல்வி குறித்து

# மனோ கூறும் 14 காரணங்கள்



புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தோல்வியடைந்தமைக்கான காரணம் தொடர்பாக அமைச்சர் மனோ கணேசன் விளக்கமளித்தார்.

தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்ட பதிவு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு விளக்கமளித்தார்.

அவர் வெளியிட்ட பதிவில்,

★சின்னம் ஒரு பிரச்சினை அல்ல. இதற்கு முன்னும் "அன்னம்" சின்னம் பயன்படுத்தப்பட்டு வெற்றி பெற்றது. சிலருக்கு தனிப்பட்ட காரணங்களால், சின்னம் தெரியாமல் இருந்திருக்கலாம். இப்படியான நபர்கள் எப்போதும் இருப்பார்கள். சின்னத்தையும் ஒரு காரணமாக சொல்வது தலையை விட்டுவிட்டு வாலை பிடிப்பதாகும் என நினைக்கிறேன்.

★முதல் கோணல், வேட்பாளர் அறிவிப்பின் தாமதம். இதற்குள் நாடு முழுக்க சுமார் ஆறாயிரம் விகாரைகளுக்கு சென்று, ஒரு சிங்கள-பௌத்த வலைப்பின்னலை ஏற்படுத்த பெரமுனவுக்கு சாவகாசமான அவகாசம் கிடைத்தது.

★தேர்தலுக்கு நிதி இல்லை. அரசாங்கமானாலும் தேர்தல் நிதி இல்லை. அப்படியானால், இது "நல்லவரா? கெட்டவரா?" (நல்ல அரசாங்கமா? கெட்ட அரசாங்கமா?) என்ற கேள்விக்கு ஒப்பானதாகும். நிதி இல்லாமல் களத்தில் குதித்து விட்டார்கள். இதுதான் உண்மை.

★முக்கியமாக, 2009 "யுத்த வெற்றி"க்கு பிறகு, ஒரு "அரசியல் வெற்றி" சிங்கள பௌத்த நிறுவனத்துக்கு (Sinhala Buddhist Establishment) தேவைப்பட்டது. அதற்கு வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ மிகச் சரியாக பொருந்தி வந்தார். இன்று இதுதான் இங்கே தேசிய யதார்த்தம்.

★மேலே சொன்ன தேசிய யதார்த்தத்தை சமாளிக்க எம்மால் இந்நேரம் நியமிக்கக்கூடிய மிகச் சிறந்த வேட்பாளர்தான் சஜித். உண்மையில் வேறு எவரும் போட்டியிட்டிருந்தால், இதில் பாதி வாக்குகள்கூட சந்தேகமே. நிறைய ஐ.தே.க.மற்றும் சிறுபான்மையினர் தேர்தலில் வாக்களிக்கச் சென்றே இருக்க மாட்டார்கள்.

★பிரதான விடயமாக ஐ.எஸ்.ஐ.எஸ். சஹ்ரான் குண்டுவெடிப்பு, எமக்கு எதிராகப் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. அமைச்சர் றிசாத் மீதான எந்த ஒரு குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை என்ற தர்க்கரீதியான உண்மையை ஒரு பொருட்டாகவே "சிங்கள-பௌத்தம்" கணக்கில் எடுக்கவில்லை.

அமைச்சர் றிசாத் மூலம், சஜித்துக்கு வரும் சர்ரசரி முஸ்லிம் வாக்குகளை விட, சஜித்துக்கு வரவிருந்த கணிசமான சிங்கள வாக்குகளை, அமைச்சர் றிசாத்தின் பெயரைப் பயன்படுத்தி, பெரமுன கவனமாகத் திட்டமிட்டு, சமூக ஊடக, நேரடி ஊடகப் பிரசாரங்கள் மூலம், தடுத்து நிறுத்தியது. இது நான் கண்ட யதார்த்தம்.

★மேலே சொல்லப்பட்ட உத்தியை அல்லது தமிழ்-முஸ்லிம் முரண்பாட்டை பயன்படுத்தி, வன்னியிலும் கிழக்கிலும் சஜித்துக்கு வரவிருந்த தமிழ் வாக்குகளை தடுத்து நிறுத்தவும் பெரமுன முயன்றது.

இந்தத் திட்டத்துக்கு எதிராக நான் விசேட கவனம் எடுத்து என்னால் இயன்றதைச் செய்தேன்.

எப்படி இருந்தாலும் இவையெல்லாம் பெரமுனவின் கெட்டிக்காரத்தனம் என்பேன். அவர்கள் எல்லாமே சரியாகத் திட்டமிட்டு செய்தார்கள்.

★மற்றபடி, இந்த "ரணிலை மதிக்கவில்லை" என்ற குற்றச்சாட்டு எல்லாம் பெரிய விடயம் அல்ல. ரணிலுக்கு உரிய மரியாதை கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், நின்று, நிதானித்து, சிந்திக்கக் கூட நேரம் இல்லாத, தேர்தல் பரபரப்பிலும், சிங்கள வாக்கை தேடிய ஓட்டத்திலும், ரணிலுக்கு இயற்கையான இடம் கிடைக்கவில்லை என்பதால் அவர் ஒதுக்கப்பட்டார் அல்லது ஒதுங்கினார். இந்த யதார்த்தம், மேலே இரண்டாவதில் சொன்ன, "வேட்பாளர் அறிவிப்பின் தாமதம்" என்பதால் வந்த வினை. இதற்கு யார் பொறுப்பு?

★ஒருவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக ஒரு நிலைப்பாட்டை எடுத்து, பெருங்கூட்டங்களை அதிகாரபூர்வமாக ஊடக ஒளியொலி வாங்கிகளின் முன் நடத்தாமல், தம் தரைமட்ட கட்சி இயந்திரம் மூலம் பிரசாரம் செய்து இருக்கலாமோ என யோசிக்கின்றேன். (கூட்டமைப்பு பகிரங்க நிலைப்பாட்டை எடுக்காமல் இருந்திருந்தால் அது இன்று அவர்களுக்கே நன்மையாக முடிந்திருக்கும் என்பது வேறு விடயம்!) அதே போல் அமைச்சர் றிசாத் வெளியே வராமல், தமது பிரதேசங்களுக்குள் மாத்திரம் செயற்பட்டு இருக்கலாமோ? என யோசிக்கிறேன்.

பெரமுன திட்டமிட்டு சாணக்கியமாகச் செயற்படும் போது, அதற்குப் பதில் நாமும் சாணக்கியமாகச் செயற்பட்டிருக்க வேண்டும். அதற்காக சில விட்டுக்கொடுப்புக்களை செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும்.

★மேலே சொன்னதில் ஒரு பகுதியாக ஒரு விடயம் சொல்ல வேண்டும். எமது அணியின் முதலாவது கூட்டம், காலி முகத்திடலில் நடைபெற்றது.

இலங்கை அரசியல் வரலாற்றில் மிகப்பெரிய கூட்டம் அதுவாகும். அதில் சிறுபான்மை கூட்டு கட்சித் தலைவர்கள் உரையாற்றவில்லை என்பது ஒரு பெரும் விவாதமாக நீண்டநாள் பேசப்பட்டது. அது இப்படிதான் நடந்தது.

அன்றைய கூட்டம் ஆரம்பமாகும் முன், கூட்ட மேடையில் நாம் சென்று அமர்ந்தோம். இது கொழும்பு என்ற காரணத்தால், முதல் வரவேற்பு உரையை சிங்களத்தில் ரவி கருணாநாயக்கவும் தமிழில் நானும் ஆற்ற இருந்தோம். மேலும் அதன் பின் அமைச்சர்கள் ஹக்கீம், றிசாத் ஆகியோரும் உரையாற்ற இருந்தார்கள். எல்லோர் பெயரும் பேச்சாளர் பெயர்ப்பட்டியலில் இருந்தது.

அப்போது அமைச்சர் திகாம்பரம் என்னைத் தொலைபேசியில் அழைத்து, அமைச்சர் றிசாத் பேசும் போது கூட்டத்தின் மத்தியில் இருந்து கூச்சல் எழுப்பப்பட இருப்பதாகவும், ஒரு தனியார் ஊடக நிறுவனம் அதைப் படம் பிடித்து அதிரடிச் செய்தியாக வெளியிட உள்ளதாகவும் இது பற்றி சஜித்துக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் எனக்குச் சொன்னார். இதன்மூலம் அந்த மாபெரும் கூட்டச்செய்தியை தலைகீழாக மாற்றும் உத்தேச சதித்திட்டம் அதுவாகும் என தெரிய வந்தது. இதை எப்படி றிசாத்திடம் சொல்லி, அவரைப் பேசாமல் இருக்கச் சொல்வது என சஜித் யோசிப்பதாகவும் சொன்னார்.

உடனே நான்தான், அங்கே மேடையில் இருந்த ஹக்கீம், றிசாத் ஆகியோரிடம் இதைக் கூறினேன். ஹக்கீமும் பேசாவிட்டால், நானும் பேசாமல் இருக்கிறேன் என றிசாத் என்னிடம் கூறினார்.

அதன்பிறகு நான்தான் அப்படியானால் சரி, நானும் உரையாற்றாமல் இருக்கின்றேன், எந்தவொரு கூட்டு சிறுபான்மை கட்சித் தலைவரும் உரையாற்றவில்லை என்று போய் விடட்டும் என்று தீர்மானித்தோம்.

கூட்டம் நடைபெறும், கொழும்பு எனது தேர்தல் மாவட்டம். முழு நாடும் கேட்கும் அந்த மேடையில் பேசும் சந்தர்ப்பம் அரியது. யார் பேசினாலும், பேசாவிட்டாலும் நான் பேசியே ஆக வேண்டும் என்று நான் கூறியிருந்தால், எவரும் என்னைத் தடுத்திருக்க முடியாது. உண்மையில் நான் பேசுவதில் எந்த ஒரு பிரச்சினையும் இல்லாவிட்டாலும் கூட, நான் அன்று ஒரு விட்டுக்கொடுப்பை செய்தேன்.

பொது நன்மை கருதி இப்படி நடந்து கொள்வது என் இரத்தத்தில் ஊறியது. ஆனால், நமது அணியில் இருக்கும் பலரின் இரத்த குரூப் வேறு.

★ரணில், சந்திரிகா, ராஜித, ரவி போன்றோர் பிரசார பயணத்தில் இம்முறை இலகு பரப்பை (Soft Zone) தேடி, தமிழ், முஸ்லிம் பிரதேசங்களுக்கு சென்றார்கள். இவர்கள் சொல்லி தமிழ், முஸ்லிம் மக்கள் வாக்களிக்கும் நிலையில் இருக்கவில்லை. உண்மையில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் சொல்ல முன்பேயே தமிழ், முஸ்லிம் மக்கள் தயாராகி விட்டார்கள். இதுதான் தரை உண்மை (Ground Truth). உங்களுக்கு உசிதமான சிங்கள பிரதேசங்களுக்கு சென்று சிங்கள வாக்கைத் தேடுங்கள் என்று பலமுறை தகவல் அனுப்பினேன்.

எவரும் கேட்கவில்லை. இந்த அரசியல்வாதிகளுக்கு சிங்கள மக்கள் மத்தியில் போக முடியாது என்பதுதான் உண்மைக் காரணம் என்றால், அவர்கள் இனி அரசியலில் இருக்கவே முடியாதே!

★உண்மையில் சஜித் மிகக் கடுமையாக உழைத்தார். ஐ.தே.கவில் ஒரு சில அமைச்சர்கள் மட்டுமே தேசிய ரீதியாக உழைத்தார்கள். மற்றோர் தம் வட்டத்துக்குள் நின்று விட்டார்கள். சஜித்தை முன்மொழிந்த அமைச்சர்கள் என்ற பக்கத்தையும் இடையில் காணவில்லை.

★நானும், ஐ.தே. முன்னணியின் ஏனைய கூட்டு கட்சித் தலைவர்களும் மிகக் கடுமையாக உழைத்தோம். எங்களது சிறுபான்மைக் கட்சிகளின் எம்.பிக்களும் கடுமையாக உழைத்தார்கள்.

என்னைப் பொறுத்தவரை நான் நாடோடியாக நாடு முழுக்க ஓடினேன். எனது சொந்தத் தேர்தலுக்கு கூட நான் இப்படி ஓடவில்லை. எனக்கு அப்போது களைப்பே தெரியவில்லை. இப்போது மிகவும் களைப்பாக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொதுபல சேனாவைத் தொடர்ந்து சிங்கள ராவய அமைப்பும் கலைக்கப்படும் என அறிவிப்பு



(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலை தொடர்ந்து நவசிங்கள ராவய அமைப்பை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுப் புதன் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசர்களுக்குப் பின்னர் நாட்டிற்கு சிறந்த தலைவர் ஒருவர் கிடைத்துள்ள காரணத்தால் இனிமேல் தேசத்தைப் பாதுகாக்க தேசிய அமைப்புகள் தேவையில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கூடிய விரைவில் புதிய அரசாங்கத்தை அமைத்து நாட்டை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்குமாறும் ஜனாதிபதியிடமும் எதிர்க்கட்சி தலைவரிடம் வேண்டிக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தங்களது குழுவிலும் குற்றவாளிகள் இருப்பின் அவர்களுக்கும் தண்டனை வழங்குமாறும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்து நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலை அடுத்து பொதுபல சேனா அமைப்பும் கலைக்கப்படும் என அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று முன் தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசியல் கைதிகளை ஜனாதிபதி விடுவிப்பார்

## அருட்தந்தை சக்திவேல் நம்பிக்கை

(கொழும்பு)

தமிழ், - முஸ்லிம் மக்களை தம்முடன் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்தமை வரவேற்கத்தக்கது என்று தெரிவித்த அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் புதிய ஜனாதிபதி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பார் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

ஏழாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றதையடுத்து அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பின் நிலைப்பாடு தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ் மக்களையும் தன்னுடன் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்திருக்கின்றார். இந்நிலையில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் ஆட்சிக் காலத்திலும் வேண்டுகோள்களை முன் வைத்திருந்தோம்.

இருப்பினும் உரிய தீர்வு எமக்குக் கிடைக்கவில்லை. இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்த 2015 ஆம் ஆண்டின் முற்பகுதியில் அரசியல் கைதியொருவர் விடுவிக்கப்பட்டிருந்தார். ஆகவே, ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி இத்தகைய கைதிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்று தெளிவாக தெரிகின்றது. அந்தவகையில் புதிய ஜனாதிபதி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கவனம் செலுத்தி அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. தமிழ்மக்கள் அவருடன் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமாயின் அரசியல் ரீதியான அவர்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட வேண்டும். அந்தவகையில் புதிய ஜனாதிபதி தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பார் என நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தவறுகளைத் திருத்தி மீள ஆட்சிக்கு வருவோம்-ஹரீன்

(கொழும்பு)

'எங்களால் விடப்பட்ட தவறுகளை இனம்கண்டு கொண்டுள்ளோம். அவற்றை திருத்திக் கொண்டு மீண்டும் அதிகாரத்துக்கு வருவோம். அத்துடன் தோல்விகளை கண்டு ஒருபோதும் சளைத்துவிட மாட்டோம். கட்சியில் இருந்து கொண்டே எனது அரசியல் நடவடிக்கையை ஆரம்பத்தில் இருந்து கொண்டு செல்லவுள்ளேன் என விளையாட்டுத்துறை முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.



விளையாட்டுத்துறை அமைச்சில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற பிரியாவிடை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிகாரம் என்பது வரும் போகும். அதேபோன்று அமைச்சுக்களுக்கான அமைச்சர்களும் மாறிமாறி நியமிக்கப்படுவார்கள். ஆனால் அரச அதிகாரிகள் தொடர்ந்து அந்த துறையில் பணி செய்யக்கூடியவர்கள். அவர்கள் ஒருபோதும் அரசியல்வாதிகளை திருப்திப்படுத்துவதற்காக தவறான விடயங்களுக்கு துணை போகக்கூடாது. அவ்வாறான அரசியல் கலாசாரம் மாற்றப்பட வேண்டும்.

நான் விளையாட்டுத்துறை அமைச்சராக சிறிது காலம்தான் இருந்தேன். என்றாலும் நான் அதிகாரிகளை ஒருபோதும் கேள்வி கேட்டதில்லை. மாறாக எனது செயலாளருடன் அனைத்து விடயங்களையும் கேட்டறிந்து, தேவையான வேலைத் திட்டங்களை மேற்கொண்டிருக்கின்றேன். அதேபோன்று அதிகாரிகள் யாரும் எனக்கு பந்தம் பிடித்துக்கொண்டு செயற்படவும் இல்லை.

எங்களால் ஏற்பட்ட தவறுகள் காரணமாக தேர்தலில் தோல்வியை சந்திக்க ஏற்பட்டது. எங்களால் ஏற்பட்ட தவறுகளை தற்போது இனம் கண்டு கொண்டுள்ளோம். அந்த தவறுகளை திருத்திக் கொண்டு மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கு முயற்சிப்போம். அரசாங்கத்தால் விடப்பட்ட தவறுகள் அனைத்தும் இறுதியில் சஜித் பிரேமதாஸவின் மீது சுமத்தப் பட்டன.

கடந்த ஒரு வருடத்தில் பல சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. ஆரம்பமாக 52 நாள் அரசியல் நெருக்கடி அதன் பின்னர் ஏப்ரல் குண்டுத்தாக்குதலுடன் எனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மிகவும் மோசமான பிரசாரம், அதனைத் தொடர்ந்து எனது தந்தையின் இழப்பு. தற்போது தேர்தல் தோல்வி. என்றாலும் தோல்விகளை கண்டு நான் ஒருபோதும் சளைத்துப் போனதில்லை. அதனால் மீண்டும் எமது அரசியல் செயற்பாடுகளை ஆரம்பிக்க இருக்கின்றோம். சஜித் பிரேமதாஸவுடனும் இது தொடர்பாக கலந்துரையாடினேன்.

வீடுவீடாக சென்று எமது அரசியல் வேலைத்திட்டங்களை தெளிவுபடுத்தி, புதிய தொரு அரசியல் கலாசாரம் ஒன்றை ஏற்படுத்துவதே எமது நோக்காகும். அத்துடன் நான் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு செல்லப்போவதாக செய்திகள் பரவி இருக்கின்றன. நான் ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டுச் செல்லமாட்டேன்.

அரச நிறுவனங்களில் அரசியல்வாதிகளின் படங்களை தொங்கவிடக்கூடாது என புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். இதனை நான் வரவேற்கின்றேன்.

எமது எதிர்வாதியாக இருந்தாலும் நல்லவிடயங்களை ஏற்படுத்தும்போது அதனை பகிரங்கமாக வரவேற்போம். அதற்காக அவர்களுடன் இணைந்து கொள்ளப்போவதாக அர்த்தம் கற்பிக்க வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிரியங்கவுக்கு எதிரான வழக்கு டிசெம்பர் 6 வரை ஒத்திவைப்பு

(லண்டன்)

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.



பிரித்தானியாவிலுள்ள இலங்கையின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது, அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாக அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பாதுகாப்பு ஆலோசகராகக் கடமையாற்றிய பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெஸ்ட்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே அவருக்கு எதிரான வழக்கு விசாரணையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக நீதவான் அறிவித்தார்.

இதேவேளை குறித்த வழக்கு விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது, தமிழ் மக்களுக்கு ஒரு நீதி கிடைக்க 'வேண்டும்' என்பதை வலியுறுத்தி நீதிமன்றத்திற்கு முன்னால் புலம்பெயர் அமைப்பினர் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

குறிப்பாக பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை உடனடியாகக் கைது செய்ய இதன்போது அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு முன்னர் குறித்த பிரிகேடியரை கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த போதும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு, நீதவான் நீதிமன்ற அலுவலக சபைக்கு இடையில் ஏற்பட்ட தாமதப் பிரச்சினை காரணமாக, நீக்கிக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



நாவலர் குருபூசை நிகழ்வு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நேற்று இந்து மாமன்றக் காப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி. கா. தர்மலிவன் தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் பன்முக ஆளுமை பற்றிய கருத்தாடல் இடம் பெற்றது. இதன் தொகுப்புரையை பிரதி அதிபர் எஸ். லலீசன் வழங்கினார்.

# A9 வீதியில் வாகனங்களின் வேகக்கட்டுப்பாட்டை குறைப்பதற்கு பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸ் மாதிரிகள் வழங்கி வைப்பு





(கிளிநொச்சி)

வடமாகாணத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் வகையிலும் A9 வீதியில் பயணிக்கும் வாகனங்களின் வேகக்கட்டுப்பாடுகளை குறைக்கும் முகமாகவும் அவற்றை கட்டுப்படுத்தும் வகையிலும் A9 வீதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸ் மாதிரிகள் நேற்று வழங்கப்பட்டன.

வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் வழிநடத்தலில் வீதி விபத்துக்களை தடுக்கும் விழிப்புணர்வு நடவடிக்கையாக வீதிப்பாதுகாப்பு வாரம் கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையான ஒரு வார காலப்பதிக்கு முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் A9 வீதியில் பயணிக்கும் வாகனங்களின் வேகக்கட்டுப்பாடுகளை குறைப்பதற்காகவும் அவற்றை கட்டுப்படுத்தும் வகையிலும் நேற்று பளை, கிளிநொச்சி, புளியங்குளம், மாங்குளம், கனகராயன் குளம் ஆகிய A9 வீதியில் அமைந்துள்ள பொலிஸ் நிலையங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் இவற்றை வீதிகளில் பொருத்துவதன் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்த முடியும்.

இதன் முதற்கட்டமாக வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் க.செவ்வேள் வடமாகாண ஆளுநரின் போக்குவரத்திற்கு பொறுப்பான விசேட செயலணியும் இணைந்து குறித்த பொலிஸ் மாதிரிகளை குறித்த பொலிஸ் நிலைய அதிகாரிகளிடம் கையளித்தனர். (9)

# கலைவிழா

(நெளுக்குளம்)

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் 26 ஆவது கலைவிழா சங்கத்தின் பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் நாளை மறுதினம் 23 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சங்கத்தின் நடராஜர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்க தலைவர் நா. தர்மராஜா அக்ளங்கன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் கலாபூஷணம் க. கனகேஸ்வரன், கலாபூஷணம் திருமதி விமலலோஜினி கனகேஸ்வரன் தம்பதியினர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொள்கின்றனர்.

இதேவேளை பரிசளிப்பு நிகழ்வுகள் 24 அம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கும் இடம்பெறவுள்ளது. (9-299)

# மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவுகளை விற்க வேண்டாம்

## கிளி.வலயக்கல்விப் பணிமனையில் பெற்றோர் முறையீடு

(அக்கராயன்)

மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற பால் பைக்கற்றுகள் மற்றும் உணவு வகைகளை மாணவர்களுக்கு வழங்காது வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துகின்ற பாடசாலை முதல்வர்கள் மீது கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி நகரத்தில் உள்ள முக்கிய பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கென உதவி அமைப்புகளினால் வழங்கப்பட்ட உணவுகள் விற்பனை செய்யப்பட்டு குறித்த நிதி பாடசாலைக் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குறித்த பாடசாலையின் பெற்றோர்களினால் வலயக் கல்விப் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவுகள் மாணவர்களுக்குத்தான் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படாது விற்பனை செய்யப்படுவது பொருத்தமற்றது எனத் தெரிவிக்கும் பெற்றோர்கள் இவ்வாறு நடந்து கொள்ளும் பாடசாலைகளின் முதல்வர்கள், நிர்வாகம் மீது இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களில் போசாக்கு பாதிப்புகள் காணப்படும் நிலையில் மாணவர்களுக்கு வழங்கும் உணவுகளை விற்பது தவறானது எனவும் இவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கும்படி வலயக் கல்விப் பணிமனையில் முறையிட்டுள்ளனர். (9-350)




# அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்யுமாறு

## வவு.காஞ்சுரமோட்டை கிராம மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)



வவுனியா வடக்கு நெடுங்கேணி காஞ்சுரமோட்டை பகுதியில் 1983ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து 35 வருடங்களின் பின்னர் மீள்குடியேறிய தமக்கான வீட்டுத்திட்ட வசதிகள் மற்றும் மின்சார வசதிகள் இதுவரை ஏற்படுத்தி தரப்படவில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசத்திற்குட்பட்ட காஞ்சுரமோட்டை கிராமத்தில் வாழ்ந்த மக்கள் கடந்த 1983 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் இடம்பெயர்ந்து இந்தியாவின் தமிழகத்திலும் ஏனைய இடங்களிலும் தங்கியிருந்த நிலையில் இவ்வாண்டின் முற்பகுதியில் தமது சொந்த இடத்தில் மீள்குடியேறியுள்ளனர்.

ஆரம்பத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இங்கிருந்து இடம்பெயர்ந்து சென்றபோதும் தற்போது 45 வரையான குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன.

இந்நிலையில் 38 வரையான குடும்பங்களுக்குரிய நிரந்தர வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டு அதற்கான முதற்கட்ட கொடுப்பனவுகள் மாத்திரமே வழங்கப்பட்டு கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்றும் இதனால் வீட்டுத்திட்டத்தை முழுமைப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த பகுதிக்கான மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் இதற்குரிய மின்இணைப்புக்கள் மருதோடைச்சந்தியில் இருந்து நாவலர் பண்ணை வரைக்குமான 2.5 கிலோமீற்றர் தூரத்திற்கு இணைப்புக்களை பொருத்துவதற்குரிய அனுமதிகளை வனவளத்திணைக்களம் வழங்காது இழுத்தடிப்பதனால் தமது கிராமம் மின்சார வசதியின்றி மூழ்கிக்காணப்படுகின்றது என்றும் தெரிவித்துள்ள அதேவேளை கிராமத்திற்கான பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறும் கோரியுள்ளதுடன், தமக்கான வீட்டுத்திட்டங்களை முழுமைப்படுத்தவும் மின்சார வசதிகளை ஏற்படுத்தித் தரவும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மேற்படி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

# சிறுபான்மையினர் இன,மத ரீதியில் வாக்களிக்காது ஜனநாயகத்தை நிலைநாட்ட வாக்களித்துள்ளார்கள்

## வவு.நகரசபை உறுப்பினர் லரிப் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

ஜனநாயகத்தினை நாட்டில் நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணப்பாட்டுடன் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்து கொள்வதாக வவுனியா நகரசபையின் உறுப்பினர் அப்துல் றசூல் முஹமட் லரிப் தெரிவித்துள்ளார். அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,


ஊழலற்ற ஜனநாயக ஆட்சியொன்றின் தேவையுணர்ந்து தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்துள்ளனர். தமிழ்-முஸ்லிம் மக்களின் வாக்கென்பது இனவாத ரீதியாகவோ, மதவாத ரீதியாகவோ நோக்கப்படகூடாது. தமிழ்-முஸ்லிம் மக்கள் பெருவாரியாக வாக்களித்தது சிங்கள பௌத்த மதம் சார்ந்த ஒருவருக்கே. இதனை இன்று இனவாதம் பரப்ப நினைப்பவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

இனவாத ரீதியாக வாக்களிப்பு இடம்பெற்றிருந்தால் தமிழர்களும் முஸ்லிம்களும் தமது சமூகம் சார்ந்து தேர்தலில் போட்டியிட் வேட்பாளர்களுக்கு அதிகளவில் வாக்களித்து தமது இனவாத சிந்தனையை வெளிப்படுத்தியிருப்பர்.

எனினும் அவர்கள் அவ்வாறான நிலையில் இல்லை என்பதனையே தற்போதைய தேர்தல் வெளிப்படுத்தியுள்ளது.

எனவே புதிய ஜனாதிபதி இனவாத சிந்தனையார்களது கருத்தியலை செவிகளில் வாங்காது இந்த நாட்டின் மக்கள் ஜனநாயக கடமையினை சரிவரவும் தமது ஆதங்கத்தினை வெளிப்படுத்தவும் இந்த தேர்தலை பயன்படுத்தியுள்ளனர் என்பதனை உணர்ந்த அனைத்து மக்களையும் அரவணைத்து செயற்பட முன் வரவேண்டும் என மேலும் தெரிவித்தார். (9-299)

# சீரற்ற காலநிலையால் விவசாய நிலங்கள் பாதிப்பு



(முரசுமோட்டை)

சீரற்ற காலநிலையால் கிளிநொச்சி பெரிய பரந்தன் பகுதியிலுள்ள விவசாய நிலங்களில் 50 ஏக்கர் அளவிலான விவசாய நிலம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாய நடவடிக்கையின் ஆரம்ப கட்ட செய்கையின் போது. போதியளவு மழை இன்மையால் விதைக்கப்பட்ட நெல் விதைகளுக்கு போதியளவு நீர் கிடைக்கவில்லை. இதனால் நெல் விதைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேற்படி நிலங்கள் தற்போது கால் நடைகளின் மேய்ச்சல் நிலங்களாக காணப்படுகிறது. இங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். (9-318)

## தெய்வக்குழந்தைகளின் ஒன்றுகூடல் நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இயங்கும் அசெர்ஸ் எனப்படும் விசேட தேவைக்குட்பட்ட சிறுவர்களின் வலுவூட்டல் இணையத்தின் தெய்வக் குழந்தைகளின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பன்னங்கண்டி எமெர்சன் வீதியிலுள்ள மேற்படி இல்லத்தில் நடத்தப்படவுள்ளது. அசர்ஸ் நிறுவனத்தின் இணை இயக்குநர் செ.மார் செலோ பியோ தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் உளநல மருத்துவ அதிகாரி வே.ஜெகரூபனும் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (9)



கிளிநொச்சி மாவட்டம் மலையாளபுரம் அன்னை சாரதாதேவி வித்தியாலயம் மற்றும் திருவள்ளுவர் வித்தியாலயம் பாடசாலை அதிபர்களினால் தமது பாடசாலையில் தரம் 5 இல் கல்வி பயிலும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் அடுத்த வருடம் புலமைப்பரீட்சையில் தோற்ற உள்ள மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்வதற்கான நிதியுதவியினையும் தந்துதவுமாறு வட்டு.இந்து வாலிபர் சங்கத்திடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நேற்று குறித்த பாடசாலைகளில் இடம்பெற்ற நிகழ்வில் ரூபா 107,770 பெறுமதியில் அன்னை சாரதாதேவி வித்தியாலய 85 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் வெற்றி தேர்வு மாதிரி வினாத்தாள்களும் திருவள்ளுவர் வித்தியாலய 17 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் வெற்றி தேர்வு மாதிரி வினாத்தாள்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதி அனுசரணையினை ஜேர்மனியை சேர்ந்த புலம்பெயர் உறவுகள் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புதிய ஜனாதிபதி தமிழ் மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி தெரிவிப்பு

(நெளுக்குளம்)

**புதிய ஜனாதிபதி தமிழ் மக்களின் அச்சத்தைப் போக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். எனவே அது தொடர்பாக சந்தித்து பேசத்தயாராக இருக்கின்றோம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களை பொறுத்தவரையில் நாங்கள் முதலில் சொன்னது போல தமிழ் மக்களின் அச்சத்தை போக்க வேண்டும். அதனால் நாம் எங்களுடைய மக்களுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற பிரச்சினைகள் சம்பந்தமாக புதிய ஜனாதிபதியிடம் பேசியே ஆகவேண்டும்.

அடுத்ததாக நாம் எதிர்பார்க்கின்ற இன்னொரு விடயம் வடக்கு, கிழக்குகளில் இருக்கின்ற முபபடைகளும் தமது விருப்பத்திற்கேற்பவே செயற்படும் நிலை ஏற்படக் கூடும்.

ஆகவே அந்நிலை நிறுத்தப்பட வேண்டும் என்ற நிலை யில் நாம் ஜனாதிபதியை சந்தித்து பேசவேண்டும்.

அந்தவகையில் ஜனாதிபதியை சந்தித்து பேசத்தயாராக இருக்கின்றோம். எம் மக்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள், அநீதிகளை அவர்களூடாக நிறுத்த வேண்டும் என்ற நடவடிக்கை களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நிச்சயமாக செயற்படும் என மேலும் தெரிவித்தார். (9-299)






## எழுத்துப் பிழையுடன் பாடசாலை பெயர்ப்பலகை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு முள்ளியவளை பிரதேசத்தில் உள்ள கேப்பாபுலவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு 592 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் பாடசாலை பெயர்ப்பலகை ஒன்று நாட்டிவைக்கப் பட்டுள்ளது.




இந்த பெயர்ப்பலகையில் முள்ளியவளை பிரதேசத்தின் பெயரில் எழுத்துப்பிழை காணப்படுகின்றது. இதனை பாடசாலை சமூகம் உடனடியாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதேச கல்வி சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த பெயர்ப்பலகையினை அமைப்பதற்குதெற்கினை சேர்ந்த பிரீஸ்ரோ என்ற நிறுவனம் நிதி உதவிசெய்துள்ளதாக அந்த நிறுவனத்தின் சின்னமும் பொறிக்கப் பட்டுள்ளதுடன் பதாகையினை அமைப்பதற்கு தொழில்நுட்ப உதவி வழங்கியுள்ளதாக 59 ஆவது படைப்பிரிவின் 2ஆவது பிரிவு படையினர் எனப் பெயர் பொறிக்கப்பட்டு படையினரின் சின்னத்துடனும் பாடசாலையின் பெயர்ப்பலகை நாட்டப்பட்டுள் ளமை கல்விசமூகத்தின் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனை அகற்றி மாற்று நடவடிக்கையினை உடனடியாக பாடசாலை சமூகம் மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (9-281)

# முல்லை. விசுவமடு றெட்பானா பகுதிகளில் உள்ள மண் அணைகளை அகற்றுமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு, விசுவமடு, றெட்பானா ஆகிய பகுதிகளில் காணப்படுகின்ற மண் அணைகளை அகற்றித்தருமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின்கீழ் உள்ள விசுவமடு,றெட்பானா, தேராவில்,வள்ளுவர்புரம் ஆகிய கிராமங்களை ஊடறுத்து யுத்த காலத்தில் போடப்பட்ட மண் அணைகள் இதுவரை அகற்றப் படாமல் காணப்படுவதனால் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

அதாவது குறித்த மண் அணை கள் குடியிருப்புக்காணிகள் மற்றும் விவசாய நிலங்கள் என்பவற்றை ஊடறுத்து மண்அணைகள் அமைக் கப்பட்டுள்ளதால் மேற்படி காணிகளில் பயிர்ச்செய்கைகளை மேற் கொள்ளமுடியாத நிலை காணப் படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்வாறு தமது காணிகளை ஊடறுத்துச்செல்லும் மண் அணைகளை அகற்றித்தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

# ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை தேசிய இனங்கள் தமது மன எண்ணப்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளன

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

(கண்டாவளை)

சிறுபான்மை தேசிய இனங்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒருமித்து வாக்களித்து தங்கள் முடிவுகளை வெளிப்படுத்தியதன் ஊடாக தமது மன எண்ணப்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளன என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு பிற்பாடான கள நிலைமைகள் குறித்து நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் அமைப்பாளர்கள் உடனான கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனிவரும் காலங்கள் மிகவும் இக்கட்டானவையாக இருக்கலாம்.ஆனால் தமிழ்த் தேசிய உணர்வுடன் அனைவரும் துணிவுடன் பயணிக்கவேண்டும். பயணித்து எமது இனத்தினுடைய இலக்குகளை அடைவதற்கு உங்களால் முடிந்த அளவிற்கு பங்களிப்பு வழங்க வேண்டும் என்று கூறியதுடன் இந்தத் தேர்தலில் நாம் தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கும் -சர்வதேச சமூகத்திற்கும் ஒரு செய்தியை கூறியிருக்கின்றோம்.இந்த இலங்கைத்தீவில் சிறுபான்மை தேசிய இனங்கள் ஆகிய நாங்கள் பெரும்பான்மை தேசிய இனத்திற்கு வழங்கப்படுகின்ற சகல உரிமைகளையும் வழங்கக்கூடிய தலைவர்களை ஏற்றுக்கொள்வோம் என்பதையும் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வை கோருகிறோம் என்பதுமாகும். இதைப் புரிந்து கொண்டு புதிதாக பதவி ஏற்றிருக்கும் ஜனாதிபதி செயற்படுவார் என எண்ணுகின்றேன் என மேலும் தெரிவித்தார். (9-315)



## நூல் வெளியீடு

(முரசுமோட்டை)

எழுத்தாளர் தாமரைச்செல்வி எழுதிய "உயிர் வாசம்" என்னும் நூலின் வெளியீட்டு விழா பரந்தன் குமரபுரம் பகுதியில் அமைந்துள்ள "சுப்பிரமணியம் இராசம்மா" நினைவு மணிமண்டபத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நூலின் அறிமுகவுரையை கவிஞர் கருணாகரன் நிகழ்த்த நயவுரைகளை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் மற்றும் காவேரி கலாமன்றத்தின் இயக்குநர் வணபிதா ரி.எஸ். ஜேசுவா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (9-318)

# பாரதம்

# தமிழக மக்களுக்காக அரசியலில் இணையத் தயார்

## ரஜினி-கமல் தெரிவிப்பு



(சென்னை)

தமிழக மக்களின் நலனுக்காக தேவையேற்பட்டால் இருவரும் அரசியல் ரீதியாக இணைந்து செயற்படதயார்என மக்கள்நீதி மய்ய தலைவர் கமல்ஹாசன் மற்றும் நடிகர் ரஜினிகாந்த் இருவரும் பரஸ்பரம் தெரிவித்துள்ளனர்.

மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவரும், நடிகருமான கமல் ஹாசன் திரைக்கு வந்து 60 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, 'கமல் 60' என்ற நிகழ்ச்சி நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய நடிகர் விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர், கமல் துணிச்சலோடு அரசியலில் இறங்கி விட்டார். ரஜினிகாந்த் அரசியலுக்கு வர வேண்டும் என கோடான கோடி ரசிகர்கள் எதிர் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

கமலும் ரஜினியும் இணைந்தால் தமிழகத்துக்கும், தமிழர்களுக்கும் நல்லது என பகிரங்க கோரிக் கையினை விடுத்தார்.

அரசியலில்ரஜினியுடன் இணைந்து செயற்படுவீர்களா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த கமல் ஹாசன், தமிழகத்தின் மேம்பாட்டிற்காக சேர்ந்து பயணிக்க வேண்டும் என்றால் நானும், ரஜினியும் சேர்ந்து பயணிப்போம். ரஜினியுடன் இணைந்து பயணிப்பதில் தவறில்லை. அவசியம் ஏற்பட்டால் இணைவோம் நானும் அவரும் இணைவோம் என தெரிவித்தார்.

இந்நிலையில் சென்னை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களை சந்தித்த நடிகர் ரஜினிகாந்திடம், அதே கேள்வி செய்தியாளர்களினால் எழுப்பப்பட்ட நிலையில், அதற்கு பதிலளித்த ரஜினி, தேவைப்பட்டால், இணைய வேண்டிய சூழல் ஏற்பட்டால் கமலுடன் இணைவேன் எனப் பதிலளித்தார். (2)

# காற்று மாசு தொடர்பாக விவசாயிகள் கைது



(டில்லி)

பயிர்க் கழிவுகளை எரித்த 29 விவசாயிகள் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். டில்லி, உ.பி., பஞ்சாப், அரியானா மாநிலங்களில் வேளாண் பயிர் கழிவுகள் எரிக்கப்படுவதால் டில்லியில் காற்று மாசுபாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

அரச அறிவுறுத்தலின் பேரில் பயிர்க்கழிவுகளை எரிப்பதை விவ சாயிகள் நிறுத்தியதால், 2 நாட்களுக்கு முன்னர் டில்லியில் காற்றின் தரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் நேற்று புதன்கிழமை மீண்டும் மோசமான நிலைக்கு காற்றின் தரம் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காற்று மாசு தொடர்பான வழக்கை ஏற்கனவே விசாரித்த உச்ச நீதிமன்றம் காற்று மாசை அதிகரிக்கச் செய்யும் வகையிலான செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டிருந்தது. காற்று மாசு தொடர்பாக விவசாயிகள் கைது செய்யப்படுவது இதுவே முதல்முறை யென்பது குறிப்பிடத்தக்கது. (2)

# காஷ்மீரில் தீவிரவாதிகளின் பதுங்குமிடம் கண்டுபிடிப்பு

## குண்டுகள்,துப்பாக்கிகள் பறிமுதல்

(காஷ்மீர்)

காஷ்மீரில் தீவிரவாதிகள் பதுங்குமிடத்தை பாதுகாப்புப் படையினர் கண்டறிந்துள்ளனர். அங்கிருந்து ஏராளமான வெடிகுண்டுகள், துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து இரத்துச்செய்யப்பட்டதை தொடர்ந்து, அங்கு தாக்குதல் நடத்த பாகிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாத இயக்கங்கள் முயற்சி செய்து வருகின்றன.

இதற்காக, அந்நாட்டு இராணுவத்தின் உதவியுடன் காஷ்மீரில் தீவிரவாதிகள் ஊடுருவி வருவதாக உளவு அமைப்புகள் எச்சரித்துள்ளன. இதன் காரணமாக, காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையை இராணுவத்தினரும், பொலிஸாரும் முடுக்கி விட்டுள்ளனர். இந்நிலையில், காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள தாயிர் வனப்பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

பொலிஸார், இராணுவத்தினர் அடங்கிய பாதுகாப்புப் படையினர் நேற்று முன்தினம் அதிகாலை அப்பகுதிக்குச் சென்று தேடுதல் பணியில் ஈடுபட்டனர். அப்போது, அங்குள்ள ஓர் இடத்தில் மரக்கட்டைகளை கொண்டு அமைக்கப்பட்ட சிறிய அளவிலான வீடு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, அங்கு சென்று பார்த்தபோது, ஏராளமான ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. எனினும், அங்கு தீவிரவாதிகள் யாரும் இல்லை. பொலிஸாரிடமிருந்து தப்பிச் செல்லும் தீவிரவாதிகள், தாங்கள் பதுங்குவதற்காக இந்த இடத்தை பயன்படுத்தி வந்ததாக இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து, அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐ.இ.டி வெடிபொருட்கள், கையெறி குண்டுகள், இயந்திரத் துப்பாக்கிகள், வாக்கி டாக்கி உள்ளிட்டவற்றை பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்தனர். மேலும், அந்தப்பகுதியில் தீவிரவாதிகளை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (2)

# போர்க்களமான

(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் சீனாவுக்கு எதிராக போராட்டம் நடத்தி வரும் ஜனநாயக ஆர்வலர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்பு மத்திய பகுதியில் உள்ள பாலிடெக்னிக் பல்கலைக்கழகத்துக்குள் புகுந்து, அதை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

பல்கலைக்கழக வளாகத்தில் தங்கி போராட்டம் நடத்தி வரும் போராட்டக்காரர்கள் பொலிஸார் உள்ளே நுழையாமல் இருக்க அவர்கள் மீது பெற்றோல் குண்டுகளை வீசியும், அம்புகளை ஏவியும் தாக்கினர். பொலிஸார் பல முறை அறிவுறுத்தியும் போராட்டக்காரர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியே வர மறுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் அதிரடியாக பல்கலைக்கழகத்தை சுற்றிவளைத்தனர். 18 வயதுக்குட்பட சிறுவர்களை தவிர போராட்டக்காரர்கள் அனைவரையும் கைது செய்வோம் எனப் பொலிஸார் கூறினர்.

இதனால் போராட்டக்காரர்களில் பலர் பல்கலைக்கழகத்தில் இருந்து தப்பி ஓட முயன்றனர். ஆனால் பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும், இறப்பர் குண்டுகளால் சுட்டும் சுமார் 100 பேரை கைது செய்தனர்.

இந்த நிலையில் பல்கலைக்கழகத்தை முற்றுகையிட்டுள்ள பொலிஸார் உள்ளே இருக்கும் போராட்டக்காரர்களை கைது



# உணவு மற்றும் வீடு கிறிஸ்மஸ் தாத்தாவிற் எழுதிய 7 வயதுச்

(லண்டன்)

ஏழு வயதுச் சிறுமி தனது குடும்பத்திற்கு வீடு மற்றும் உணவு கேட்டு கிறிஸ்மஸ் தந்தைக்கு (Santa Claus) கடிதம் எழுதியுள்ளார்.

இந்தக்கடிதம் லிவர்பூலின் எவரன்னில் உள்ள சமூக நிலையத்தின் கிறிஸ்மஸ் அஞ்சல் பெட்டியில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தைத் திறந்து படித்த கவுன்சிலர் ஜெரார்ட் வூட்ஹவுஸ் கூறுகையில்,இந்த விடயம் குறித்து தான் மிகவும் கவலையடைவதாகக் கூறினார்.

நான் குழந்தைகளை நன்கு அறிவேன்.ஏழு வயதுக் குழந்தை கிறிஸ்மஸ் பற்றி கவலைப்படுவது மிகவும் வருத்தத்துக்குரியது என்று அவர் கூறினார். அந்தக் கடிதத்தில் சிறுமி இவ்வாறு எழுதியுள்ளார். அன்புள்ள கிறிஸ்மஸ் தந்தையே எங்களுக்கு உதவ முடியுமா?

நாங்கள் கிறிஸ்மஸ்"க்கு ஒரு வீட்டைப் பெற்றுக்கொள்ளலாமா? நாங்கள் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று அம்மா விரும்புகிறார். நீங்கள் எங்களுக்கு கொஞ்சம் உணவு கொடுக்க முடியுமா, கிறிஸ்மஸ்"க்கு ஒரு நல்ல பொம்மையை நான் பெற்றுக் கொள்ளலாமா? நன்றி என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

சமூக நிலையத்திற
கிறிஸ்மஸ் வாழ்த்துக்க
பெட்டி அங்கு வைக்கப்ப
சமூக நிலையத்தில் உ
அந்த நிலையத்தினை
அந்த அஞ்சல் பெட்டியில்
கப்பட்டுள்ளது.
கவுன்சிலர் ஜெரார்ட்
சிறுமிக்கு 4 மற்றும் 10
உள்ளனர், அவர்கள் த
வசித்து வருகின்றனர்.
சமூக நிலையக்குழு
செய்கின்றது. அத்துடன்
ஒரு ஹோட்டலில் தங்க
இந்தக் குழந்தைகளு
குறித்து தனக்கு ஆச்ச
தொடர்ந்தால் நிலை
கூறினார்.
இது எவ்வளவு கடி
உணர்கின்றோம். இது ப
கூறினார்.

# பிரித்தானியாவுக்குள் நுழைய முற்பட்ட 25

(பிரிட்டன்)


நெதர்லாந்திலிருந்து வெளியேறிய சரக்குக் கப்பல் ஒன்றில் இருந்து பிரித்தானியாவுக்கு சட்ட விரோதமாக நுழைய முற்பட்ட 25 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத குடியேற்றவாசிகள் குளிரூட்டப்பட்ட கொள்கலனில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் பிரித்தானியாவுக்குச் செல்லவிருந்த அந்தச் சரக்குக் கப்பல் டச்சு துறைமுகத்திற்குத் திரும்பியதாகவும் அவசரச் சேவைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கண்டுபிடிக்கப்பட்ட குடியேற்ற



# ...து ஹொங்கொங் பல்கலைக்கழகம்



செய்ய தொடர்ந்து தீவிரமாக முயன்று வருகின்றனர். இதனால் பொலிஸார் பல்கலைக்கழகத்துக்குள் நுழையாமல் இருக்க முக்கிய நுழைவாயில்களை போராட்டக்காரர்கள் தீயிட்டு கொளுத்தினர்.

அதேசமயம் போராட்டக்காரர்களில் பலர் பல்கலைக்கழகத்தின் பின்புறம் வழியாக கயிறு கட்டி இறங்கியும், கழிவு நீர் சுரங்கப்பாதை வழியாகவும் தப்பிச் சென்றனர். எனினும் பல்கலைக்கழகத்துக்குள் இருக்கும் சுமார் 200 போராட்டக்காரர்கள் தொடர்ந்து பொலிஸாருடன் மோதி வருகின்றனர். இதனால் பல்கலைக்கழகம் வன்முறைக்களமாக மாறியிருக்கிறது. (2)

## ...டு கேட்டு ...ற்கு கடிதம் ...ச் சிறுமி

...பத்திற்கு வருகை தரும் குழந்தைகள் ...த்துக்களை இடுவதற்காக ஒரு அஞ்சல் ...க்கப்பட்டிருந்தது.

...ந்தில் உள்ள குழு பண்டிகை காலத்திற்காக ...னை அலங்கரிக்கத் தொடங்கியபோது ...ட்டியில் இருந்து இக்கடிதம் கண்டெடுக்...


...ரார்ட் வூட்ஹவுஸ் மேலும் கூறுகையில், ...ம் 10 வயதுடைய இரண்டு சகோதரிகள் ...கள் தற்போது உறவினர்களின் வீட்டில் ...னர்.

...குழு அந்தக் குடும்பத்திற்கு உதவ முயற்சி ...துடன் கிறிஸ்மஸ் தினத்தன்று அவர்களை ...தங்க வைக்கலாம் என்று விரும்புகின்றது. ...தகளுக்கு உதவ யாரும் இல்லை என்பது ... ஆச்சரியமாக இல்லை என்றும் இது ...லைமை மோசமாகி விடும் என்றும்...

...வு கடினமானது என்பதை நாங்கள் ... இது மிகவும் வருத்தத்திற்குரியது என்று... (2)

## ஈரானின் போர்ட்டோ அணுசக்தி நிலையத்துக்கான தடைகள் தொடர்பான சலுகைகள் நிறுத்தம்

### அமெரிக்கா அறிவிப்பு



(வோஷிங்டன்)

ஈரானின் போர்ட்டோ அணுசக்தி நிலையம் குறித்து தன்னால் வழங்கப்பட்டிருந்த தடைகள் தொடர்பான சலுகைகளை நிறுத்தப் போவதாக அமெரிக்கா நேற்று முன்தினம் திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

தனது யுரேனிய செறிவூட்டல் நடவடிக்கையை மீள ஆரம் பித்துள்ளதாக ஈரான் அறிவித்ததையடுத்து அந்நாட்டுடன் உலக அதிகார சக்திகளால் செய்து கொள்ளப்பட்ட அணுசக்தி உடன்படிக்கையின் முக்கிய கூறுகளில் ஒன்றை முடிவுக்குக் கொண்டு வருவதாக மேற்படி அறிவிப்பு உள்ளது.

போர்ட்டோ அணுசக்தி நிலையத்திலான செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படுவதாக ஈரானிய ஜனாதிபதி ஹஸன் ரோஹானி அறிவித்திருந்தமை குறித்து சுட்டிக்காட்டிய அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் போம்பியோ, தடைகள் தொடர்பில் சலுகை வழங்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் ஈரான் மிகவும் மோசமான முன்னடியெடுத்து வைப்புகளை மேற்கொண்டு வருவதாகவும் அதனால் அமெரிக்கா எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் போர்டோ அணுசக்தி நிலையத்துடன் தொடர்புபட்ட தடைகளிலான சலுகைகளை நிறுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

தீவிரவாதத்துக்கு ஆதரவு அளித்து வரும் நாடொன்றுக்கு யுரேனியத்தை செறிவாக்கம் செய்வதற்கு உரிமையாகவுள்ள அளவு பூச்சியமாகவுள்ளதாக தெரிவித்த அவர், "இந்நிலையில் ஈரான் இதற்கு முன் இரகசியமானதாகவிருந்த அணுசக்தி நிலையத்தில் செறிவாக்கத்தை மீள ஆரம்பிப்பதற்கு எதுவித காரணமும் கிடையாது.

அதனால் அந்நாடு உடனடியாக தனது செயற்பாடுகளை மாற்றிக் கொள்ள வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த வருடம் ஈரானுடன் செய்துகொண்ட அணுசக்தி உடன்படிக்கையிலிருந்து தனது நாட்டை வாபஸ் பெற்றுக்கொண்டது முதல் ஈரானுக்கு எதிரான தடைகள் மீள நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

எனினும் அணுசக்தி உடன்படிக்கையில் தற்போதும் உள்ள ஏனைய நாடுகளுக்கு அந்த உடன்படிக்கையை முன்னெடுக்க அனுமதிக்கும் வகையில் சில தடைகள் தொடர்பான சலுகைகளை அமெரிக்கா தொடர்ந்து பேணி வருகிறது. (2)

## ...ள் சட்டவிரோதமாக ...5 பேர் கண்டுபிடிப்பு




வாசிகளுக்கு துறைமுகத்திலேயே மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அவர்களுள் இரண்டு பேர் அதிகக் குளிரால் பாதிக்கப்பட்டதன் காரணமாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கடந்த மாதம், கொள்கலன் பாரவூர்தி ஒன்றின் குளிரூட்டப்பட்ட கொள்கலனிலிருந்து 39 வியட்நாம் நாட்டவர்கள் உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டனர்.

ஐரோப்பாவிற்குள் சட்டவிரோதமாக குடியேறும் முயற்சிகளைத் தடுக்க, பொலிஸ் அதிகாரிகள் தொடர்ந்து போராடி வருகின்றனர். (2)

## 3 கப்பல்களை 16 ஊழியர்களுடன் கடத்திய ஹவுதி கிளர்ச்சியாளர்கள்

(சனா)

ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் பகுதியில் 16 ஊழியர்களையும் மூன்று கப்பல்களையும் கடத்தியதாக தென் கொரியா தெரிவித்தது.

"செங்கடலின் தென் பகுதியில் மூன்று கப்பல்களை ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடத்தியுள்ளனர். கடத்தப்பட்ட கப்பல்களில் ஒன்று சவுதியைச் சேர்ந்தது. மற்ற இரண்டு கப்பல்கள் தென்கொரியாவுக்குச் சொந்தமானவை.

மேலும், கப்பலில் இருந்த 16 ஊழியர்களையும் ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடத்தி உள்ளனர் என தென்கொரிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.



"தெற்கு செங்கடலில் டக்போட் ரீ கப்பல் ஆயுதம் தாங்கிய ஏமன் கிளர்ச்சியாளர்களால் கடத்தப்பட்டது.

வளைகுடாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நீரிணைப்புப் பாதையில் நடத்தப்பட்டுள்ள இந்தச் சம்பவம் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது" என்று சவுதி தெரிவித்துள்ளது. (2)

# நான்கு துண்டுகளாக ஐ.தே.க. பிளவு!

## ரோஹித சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி நான்கு துண்டுகளாக பிளவடைந்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுண வர்த்தன சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி தலைவரின் முதுகெலும்பு இல்லாத நடவடிக்கையால் அந்தக் கட்சி பிளவடைந்துள்ளது. கடந்த 2015 ஆம் ஆண்டு தோல்வியடைந்த போதும் மகிந்த ராஜபக்ஷவும் அவருடன் இணைந்தவர்களும் சோர்ந்து போகவில்லை.




எனினும், இன்று தோல்வியடைந்தவுடன் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ஓடி ஒளிந்துள்ளனர். குறிப்பாக ராஜித மற்றும் சம்பிக்க போன்றோர் எங்கே எனத் தெரியவில்லை.

அவர்கள் வெளியில் வந்து பேச வேண்டும். ஜன்னலில் தொங்கவிடுவதாக கூறிய பொன்சேகா இன்று எங்கே.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் இன்று பல் வேறு திசைகளில் சிதறிப் போயுள்ளனர். அவர்களை இனி 20 வருடங்களானாலும் ஒன்றாய் இணைக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 30059 வீட்டுத் தோட்டங்கள் காலி மாவட்டத்தில் அமைப்பு

(காலி)

உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்தில் 30 ஆயிரத்து 59 வீட்டுத்தோட்டங்கள் அமைக்கப்பட்டன.



தென் மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் இதனைத் தெரிவித்தது.

ஆயிரத்து 154 கிராமங்களை மையப்படுத்தி இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

33 விவசாய வலயங்களில் இந்த வீட்டுத்தோட்டங்கள் அமைக்கப் பட்டதாக குறித்த அலுவலகம் மேலும் தெரிவித்தது. (இ-7)

# புத்தளத்தில் மூன்று வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்து

## கர்ப்பிணி உட்பட நால்வர் காயம்

(புத்தளம்)

புத்தளம்- குருநாகல் பிரதான வீதியில், மூன்று வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில், நால்வர் படுகாயமடைந்தனர்.



இந்த விபத்து நேற்று முன் தினம் மாலை 5 மணியளவில் இடம் பெற்றது. இந்த விபத்தில் காயமடைந்த கர்ப்பிணிப் பெண் அடங்கலாக நால்வர் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனரென, ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர். புத்தளம் நோக்கிப் பயணித்த கப் சாரதி நித்திரை கலக்கத்துடன் அதிக வேகத்தில் பயணித்த நிலையில், எதிரே வந்த கப் மற்றும் வான் என்பவற்றுடன் மோதுண்டுள்ளார்.

இதனையடுத்து, குறித்த வாகனங்களில் பயணித்தவர்கள் படுகாயமடைந்துள்ளனரெனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)





# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாக்கும் மனமும்

நானா? நீயா?

இது இன்றைக்கு எல்லா மட்டத்திலேயும் இருந்துகொண்டு இருக்கிற ஒரு கேள்வி. ஒரு சமயம் மனதுக்கும் வாக்குக்கும் இடையிலே கூட இந்தப் பிரச்சினை வந்து விட்டது. அதாவது இரண்டு பேருக்குள்ளே யார் பெரியவங்க... என்கிற சண்டை மனம் என்பது நினைக்கிறது. வாக்கு என்பது பேசுவது. வாக்கு தேவதை தான் முதலில் சண்டைக்கு வந்தது. அதாவது எந்த தேவதையின் உதவியுடன் வாக்கு பேசுகிறதோ அதுதான் வாக்குத் தேவதை.

வாக்குத் தேவதை மனதைப் பார்த்து சொல்லியது. ஏ!.. மனமே! நீ எவ்வளவு விடயங்களை நினைக்கிறாய்! உண்மைதான் நீ நினைக்கிறதை வெளியில் சொல்வது நான்தானே! நான் பேசாமல் இருந்து விட்டால் நீ நினைக்கிறது என்பது வெளியே யாருக்குத் தெரியப் போகிறது. அதாவது உன்னைப் பற்றி வெளியே தெரிவதற்கு நான் தான் காரணம். அதனாலே நான் தான் பெரியவன் இது வாக்கு தேவதையோட விவாதம்! இதற்கு மனது பதில் சொல்லியது.

இதோ பாரு நீ பேசுறத்துக்கு விடயம் கொடுப்பதே நான் தானே! நான் நினைக்கவில்லை என்றால் நீ எப்படி பேச முடியும். முதலில் நான் சிந்திக்கிறேன்.. அப்புறம் அதை நீ வார்த்தையாலே வெளிப்படுத்துகிறாய்! அதனாலே நான் தான் பெரியவன்

அப்படி என்றது மனது. இப்பொழுது வாக்கு பெரிதா? மனது பெரிதா? இதுதான் அவர்களுக்குள் போட்டி!. எண்ணினால் தான் பேச்சு என்கிறது இது. பேசினால்தானே எண்ணமே வெளியிலே தெரியும் என்றது அது. இப்பொழுது என்ன செய்வது?

சரி நமக்குள்ளே சண்டை போட வேண்டாம். நேராகப் பிரம்மாவிடம் போவோம். அவர் தானேஎல்லாத்தையும் படைத்தவர், உண்டாக்கியவர் . அவர் என்ன சொல்கிறார் என்று கேட்போம் என்று முடிவு செய்து இரண்டு பேரும் பிரம்மாவிடம் சென்றார்கள். பிரம்மா சிறிது யோசித்துப் பார்த்து விட்டு படைப்பு ரீதியாக மனதைத்தான் படைத்தேன். அதனாலே மனது தான் பெரிது என்று சொன்னார், இதைக் கேட்டதும் வாக்கு தேவதைக்கு ரொம்ப வருத்தம். ஒரு மூலையிலே சென்று அழ ஆரம்பித்தது. அப்பொழுது மனது அங்கே வந்து ஆறுதல் சொல்லியது. இதோ பார். அழாதே நமக்குள்ளே யார் பெரியவங்க என்பதை நாமே ஒரு பரீட்சை வைத்துத் தீர்மானிப்போம். அதற்கு நீ ரெடியா என்றது. ரெடி என்றது அது!

அதாவது இப்பொழுது நாங்கள் இரண்டு பேரும் என்ன செய்வோம் என்றால் வேகமாக ஓடிச் சென்று பிரம்மத்தைப் பார்த்து விட்டு இதே இடத்திற்குத் திரும்பி வந்து விட வேண்டும். யார் முன்னர் திரும்பி வறார்களோ அவர்கள் தான் பெரியவங்க சரியா என்றது மனது. சரி என்று ஒத்துக் கொண்டது வாக்கு. உடனே போட்டி ஆரம்பமாகியது. இரண்டு பேரும் பிரம்மத்தை நோக்கி ஓட ஆரம்பித்தார்கள். மனது மனோ வேகத்திலே போனது. மனோ வேகம் என்றால் அது எவ்வளவு பெரிய ஸ்பீட் தெரியுமா? இப்ப நீங்க மனதாலேயே அமெரிக்காவிற்கு போகணும் என்றால் எவ்வளவு நேரம் ஆகும். நினைத்தாலே போனது மாதிரி அவ்வளவு ஸ்பீட்!

இந்த ஸ்பீட் லே மனது விம்பத்தை நோக்கிப் சென்று கொண்டிருக்கிறது. வாக்கு அவ்வளவு வேகத்திலே போக முடியவில்லை. வாக்கு தேவதை தானே நடந்து கொண்டிருக்கு. ஓட முடியவில்லை. சிறிது தூரம் சென்று பார்த்தது அதற்கு மேலே ஓட முடியவில்லை நின்று விட்டது. முன்னர் வந்த மனது ரொம்ப காலம் கழித்து திரும்பி வந்தது. வழியிலே நின்று கொண்டிருந்த வாக்கு தேவதை அதைப் பார்த்தது. என்ன பிரம்மத்தைப் பார்த்தியா என்று கேட்டது. எங்கே பார்க்கிறது பிரம்மம் என்பது எனக்கும் எட்டாத ஒரு விஷயம் என்பதைத் தெரிந்து கொண்டு திரும்பி வந்து விட்டேன் என்றது மனது. அது எனக்கும் எட்டாத ஒரு விஷயமாகத் தான் இருக்கிறது. அதனாலே நமக்குள்ளே போட்டி வேண்டாம். இரண்டு பேரும் நண்பர்களாக இருப்போம் என்றது வாக்கு. மனதும் வாக்கும் நெருக்கமாகி விட்டார்கள். நமக்கு எல்லாம் மனதும் வாக்கும் நெருக்கமாகிக இருக்கிறதோ அவ்வளவுக்கு உலகத்திலே கூடும்.

மனம், வாக்கு, செயல் மூன்றும் ஒன்றாக இருக்க வேண்டும். என்ன நினைக்கிறோமோ அதைச் சொல்ல வேண்டும். என்ன சொல்கிறோமோ அதைச் செய்ய வேண்டும். இப்ப எல்லாம் அப்படியா இருக்கிறோம்... நினைத்துப் பாருங்கோ.

ஒரு கூட்டத்திலே ஒரு சொற்பொழிவாளர் பேசி முடித்தார். கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் மனதுக்குள்ளே என்ன நினைத்தாரோ தெரியவில்லை ரொம்ப உற்சாகமாகக் கை தட்டினார். ரொம்ப நேரம் விடாமல் கை தட்டினார். தட்டி முடித்ததும் பக்கத்திலே இருந்த நான் அவரிடம் கேட்டேன்.

அவருடைய பேச்சுக்காகவே இந்தக் கைதட்டல் என்றேன். இல்லை... பேச்சை நிறுத்தியதற்காக என்றார் அவர்.

# அமைதியான தேர்தலாயினும் அனைத்துத் தரப்பையும் அரவணைக்கும் போக்கு இல்லாமை விசனத்துக்குரியது

## பொதுநலவாய கண்காணிப்புக்குழு அதிருப்தி



- ✦ பெண்களின் பிரதிநிதித்துவம் போதாது
- ✦ தனியார் ஊடகங்கள் முறைப்படுத்தப்படவில்லை
- ✦ சமூக ஊடகத் தகவல்களில் வெறுப்புணர்வுப் பேச்சுக்கள்

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் பெருமளவிற்கு அமைதியானதாகவும் நம்பகத்தன்மை மிகுந்ததாகவும் இருந்த அதே வேளை இலங்கை சமூகத்தில் ஒன்றிணைவும் அனைத்துத் தரப்பினரையும் அரவணைக்கும் போக்கும் இல்லாமை விசனத்துக்குரியதாக இருக்கின்றது என்று ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்கு வந்திருந்த பொதுநலவாய கண்காணிப்பாளர் குழுவின் தலைவர் புரொஸ்பர் பாணி சுட்டிக்காட்டினார்.

கானா நாட்டின் முன்னாள் உள்துறை அமைச்சரான பாணி தலைமையிலான கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தி, தங்களது பூர்வாங்க அறிக்கையை வெளியிட்டனர்.

இறுதியறிக்கை பொதுநலவாய செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படும் என்றும், இலங்கை அரசாங்கம், அரசியல் கட்சிகள், தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் மக்களுக்கு அந்த அறிக்கை கிடைக்கச் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பூர்வாங்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் முக்கிய அம்சங்கள் வருமாறு:

இலங்கையின் தேர்தல்கள் ஆணைக்குழு நாடு பூராகவும் தேர்தல் செயன்முறைகளை மிகவும் நேர்த்தியான முறையிலும் செயற்றிறனுடனும் முன்னெடுத்திருந்தது. சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்ட தேர்தல் செயன்முறைகள் மூலம் தேர்தல்களை முறையாக நடத்துவதில் இலங்கையில் காணப்படும் நீண்டகாலப் பாரம்பரியம் வெளிப்படையாகத் தெரிந்தது. வாக்காளர்களில் 84 சதவீதமானவர்கள் தேர்தலில் பங்கேற்றார்கள். இது மிகவும் கவனத்தைத் தூண்டுவதாக இருக்கின்றது. இலங்கையின் பிரஜைகள் ஜனநாயகம் மற்றும் பொதுநலவாயத்தின் அடிப்படை விழுமியங்கள் தொடர்பில் தெளிவானதொரு நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார்கள்.

என்றாலும் இந்தத் தேர்தல் தீர்வு காணப்படவேண்டிய சில முக்கிய பிரச்சினைகளையும் கிளப்பியிருக்கிறது.

ஒரு நம்பகமான ஜனநாயக செயன்முறை என்பது இலங்கையின் ஒவ்வொரு பிரஜைக்கும் சுதந்திரமாகவும், பத்திரமாகவும் வாக்களிப்பில் பங்கேற்பதற்கான உரிமையை உத்தரவாதப்படுத்துகின்ற, சகலருக்கும் இடம்தருகின்ற ஒன்றாக இருக்க வேண்டும். எதிர்காலத்தில் இலங்கை சமூகத்தின் சகல பிரிவினரையும் அரவணைக்கக்கூடிய முறையில் தேர்தல்களை நடத்தக்கூடியதாக மேம்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இலங்கை மக்களையும் அரசியல் தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கையின் செழிப்பான கலாசார மற்றும் பன்மைத்துவம் மதிக்கப்பட வேண்டும். கொண்டாடப்பட வேண்டும். சமூக ஒன்றிணைவிற்கும் சகல தரப்பினரையும் அரவணைக்கும் போக்கிற்கும் முன்னுரிமை அளிக்குமாறு சகல அரசியல் தலைவர்களையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம்.

தேர்தலுக்கு முன்னரான நாட்களில் இன மற்றும் மதப்பதற்ற நிலையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சில குழுக்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளானதையும் நாங்கள் அவதானித்தோம். ஐக்கியத்துக்கு முன்னுரிமை கொடுக்குமாறும் அரசியல் வாழ்வில் மதிப்பு மற்றும் சகிப்புத் தன்மை பண்புகளை வெளிக்காட்டுமாறும் அரசியல் மற்றும் சிவில் சமூகத் தலைவர்களையும் சகல பிரஜைகளையும் கோருகின்றோம்.

தனியார் ஊடகங்கள் ஊடாகவும், சமூக ஊடகத்தளங்கள் மூலமும் வெறுப்புப் பேச்சுகள் ஊக்கப்படுத்தப்பட்டமை விசனத்திற்குரிய மற்றொரு அம்சமாகும். பிரசாரங்கள் முடிவடைந்த பின்னரான 48 மணித்தியால நேரத்திற்குள்ளும் கூட இந்த வெறுப்புணர்வுப் பிரசாரங்கள் தொடர்ந்ததைக் காண முடிந்தது.

ஒரு தொகுதி ஊடக வழிகாட்டல்கள் ஊடாக அரசாங்க ஊடகங்களை ஒழுங்கமைப்பதற்கான அதிகாரத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழு கொண்டுள்ளது. ஆனால் தனியார் ஊடகங்கள் பெருமளவிற்கு ஒழுங்கமைக்கப்படாதிருப்பதாகவே தோன்றுகின்றது. அடுத்த தேர்தலுக்கு முன்னதாக ஒரு சட்டரீதியான கட்டமைப்பின் ஊடாக தனியார் மற்றும் அரசாங்க ஊடகங்கள் சுயாதீனமாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். இது குறித்து எமது இறுதி அறிக்கையில் விரிவாகக் கூறுவோம்.

இலங்கையின் அரசியலில் பெண்களின் பங்கேற்பு குறைவாக இருப்பது மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 35 வேட்பாளர்களில் ஒருவர் மாத்திரமே பெண் வேட்பாளராவார். உள்ளூராட்சி மட்டத்தில் பெண்களுக்கு 25 சதவீத இட ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தியதன் மூலம் அரசியலில் பெண்களின் பங்கேற்பு விடயத்தில் இலங்கை ஏற்கனவே குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைக் கண்டிருந்தது. தேசிய மட்டத்தில் அரசியலில் பெண்களின் பங்கேற்பையும் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிப்பதை உறுதிப்படுத்துவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் குறித்துப் பரிசீலிக்கப்பட வேண்டும்.

இந்தத் தேர்தலின் ஊடாக இலங்கை மக்கள் மீண்டும் ஒருமுறை பொதுநலவாயத்தின் அடிப்படை ஜனநாயகப் பண்புகள் மீதான தங்களது பற்றுறுதியை வெளிக்காட்டியிருக்கிறார்கள். இந்தப் பண்புகளை சகல பிரஜைகளுக்குமாக மேலும் மேம்படுத்திப் பாதுகாக்குமாறு நாம் இலங்கையின் புதிய தலைமைத்துவத்தை வலியுறுத்திக் கேட்கின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# லூல்கந்தூரவில் புதையல் தோண்டிய இடத்தில் துப்பாக்கிகள், காவியுடை, இராணுவச்சீருடை மீட்பு

## பொலிஸார் தீவிர விசாரணை

(கலஹா)

கலஹா லூல்கந்தூர தோட்டப் பிரதேசத்தில் புதையல் தோண்டிய குழுவினரை பொலிஸார் சுற்றிவளைத்து கைது செய்ய முற்பட்ட சந்தர்ப்பத்தில் சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பியோடினர்.

இந்நிலையில் அங்கிருந்து பெருமளவு வெடிபொருட்கள், துப்பாக்கிகள், பௌத்த துறவிகள் அணியும் காவியுடை, இராணுவச் சீருடைகள் உட்பட மேலும் பல பொருட்களை கைப்பற்றியதாக கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

13 கிலோகிராம் வெடி மருந்து, இரண்டு கைத்துப்பாக்கிகள், எட்டு ஜெலட்டின் குச்சிகள், இராணுவச் சீருடைகள் இரண்டு, இராணுவப் பாதணிகள், பௌத்த துறவிகளின் காவியுடை ஒன்று, மின் பிறப்பாக்கி, ஹாஸ் சிலிண்டர், கற்களைத் துளையிடும் உளிகள், அறுக்கும் கருவி, நான்கு அலவாங்குகள், வயர்கள், கேபிள் கம்பிகள், இரத்தக் கறைகள் படிந்த பூசை பொருட்கள் உட்பட மேலும் பல்வேறு பொருட்களை பொலிஸார் மீட்டனர்.

நேற்று முன்தினம் காலை பொலிஸ் அவசர சேவைப் பிரிவிற்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் ஸ்தலத்திற்கு விரைந்த கலஹா பொலிஸார் சந்தேக நபர்களைச் சுற்றிவளைத்து கைது செய்ய முற்பட்ட சந்தர்ப்பத்தில் மேற்குறிப்பிட்ட பொருட்களை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு சந்தேக நபர்கள் ஆயுதங்களுடன் தப்பிச் சென்றிருப்பதாக தெரிய வருகிறது.

லூல்கந்தூர தோட்ட கல்லுமலை பிரதேசத்தில் பிரதான வீதியிலிருந்து சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் அரசுக்குச் சொந்தமான வனப்பகுதியில் காணப்படும் கல் அடுக்குக்கள் பகுதியிலேயே புதையல் தோண்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கண்டி இராச்சியத்தின் மீதான படையெடுப்புக்களின் போது அங்குராங்கெத்த பிரதேசத்திற்கு ராஜாக்கள் தப்பிச் சென்றதாகக் கூறப்படும் வழியில் பெறுமதியான பொருட்களை மறைத்து வைத்திருக்கக் கூடும் என்ற நம்பிக்கையில் இதற்கு முன்னரும் சுமார் மூன்று தடவைகள் இவ்விடத்தில் புதையல் தோண்டும் முயற்சிகள் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.



பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்ட இராணுவச் சீருடையில் காணப்பட்ட இலக்கத்தினூடாக சந்தேக நபர்கள் இனம் காணப்பட்டதுடன் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (இ-7)

# பயங்கரவாதத்தை உருவாக்கும் நபர்களுக்கு ஒருபோதும் அங்கீகாரம் கொடுக்கமாட்டோம்

## வடக்கு- கிழக்கு இணைப்புக்கும் தினேஷ் எதிர்ப்பு



(கொழும்பு)

**வடக்கு- கிழக்கை இணைத்து நாட்டினைத் துண்டாடும்; பயங்கரவாதத்தை உருவாக்கும் நபர்களுக்கு நாம் ஒருபோதும் அங்கீகாரம் கொடுக்கமாட்டோம் என்ற உறுதியான நிலைப்பாட்டில் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தேர்தல் தோல்வியுடன் ஐக்கிய தேசியக் கட்சியினர் அரசாங்கத்தைக் கொண்டு நடத்த தகுதியில்லாதவர்கள் என்பது உறுதியாகவிட்டது. வெகு விரைவில் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் புதிய அரசாங்கத்தை அமைப்போம். அதற்கான முயற்சிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னெடுத்து வருகின்றார்.

பல தரப்புடன் அவர் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தும் வருகின்றார். எவ்வாறு இருப்பினும் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் வரையில் பாராளுமன்றத்தை கலைக்க முடியாத சட்ட சிக்கல்கள் உள்ளன. 19 ஆம் திருத்தத்திற்கு அமைய பாராளுமன்றம் அடுத்த ஆண்டு முதல் இரு மாதங்கள் வரையில் கொண்டுசெல்லப்பட வேண்டும். ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவை அமர முடியாது.

எனவே காபந்து அரசாங்கம் ஒன்றை அமைக்கும் வாய்ப்புக்கள் உள்ளன. எம்மால் அரசாங்கத்தை பொறுப்பேற்க முடியும். எமது அரசாங்கத்தில் எவரையும் புதிதாக இணைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். (இ-7)

# வாக்காளர் இடாப்பு குறித்து 70 ஆயிரம் மேன்முறையீடுகள்

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு குறித்து 70 ஆயிரம் மேன்முறையீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த மேன்முறையீடுகள் தொடர்பாக தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்த ஆணைக் குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

மாவட்டத் தேர்தல் அலுவலகங்களின் ஊடாக இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 2019 ஆம் ஆண்டுக்கான தேர்தல் இடாப்பு அடுத்த மாதம் 31 ஆம் திகதி உறுதிப்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஊழல், மோசடிகளற்ற அரசு உருவாக வேண்டும்

## வாசுதேவ வலியுறுத்து



(கொழும்பு)

திறமையான ஆளுமை மற்றும் ஊழல் மோசடிகள் அற்ற ஒரு அரசாங்கத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உருவாக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அத்துடன் பொது மக்களுக்கு வழங்கக்கூடிய அனைத்து சலுகைகளும் உடனடியாக வழங்கப்பட வேண்டும் எனவும், தேசிய அமைதிக்கும் நாட்டின் இறையாண்மைக்கும் தீங்கு விளைவிக்கும் எந்தவொரு உடன்படிக்கையையும் மேற் கொள்ளக் கூடாது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இருநாட்டு உறவு பலமாக வேண்டுமென்றால் மகிந்தவை பிரதமராக நியமிக்க வேண்டும்

## சுப்பிரமணியன் சுவாமி விருப்பம்

(டில்லி)

இந்தியா-இலங்கைக்கு இடையிலான உறவு பலமாக வேண்டும் என்றால் பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என பா.ஜ.கவின் சிரேஷ்ட தலைவரும் மாநிலங்களவை உறுப்பினருமான சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்தார்.

டுவிட்டரில் இந்த விடயம் தொடர்பாக நேற்று பதிவிட்ட அவர், "மகிந்த ராஜபக்ஷவை இலங்கையின் பிரதமராக்க வேண்டும், இதனால் இலங்கை இந்தியாவுடனான உறவுகள் திடமானதாகவும் இரும்பு போன்றும் உறுதியாக இருக்கும்" எனப் பதிவிட்டார்.



இதேவேளை இலங்கை சோசலிச குடியரசின் 7 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற நிலையில் முதலாவது அரசமுறைப் பயணமாக இந்தியா செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஹாட்லி மைந்தர்களின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தல்





(யாழ்ப்பாணம்)

கல்விச் செயற்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன்பர்சிட்டி கடற் பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்த யாழ். ஹாட்லிக் கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களின் 20 ஆவது ஆண்டு மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக கல்வி கற்றுவந்த வேளை புகையிரத விபத்தில் சிக்கி உயிரிழந்த மாணவனின் 15 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் இடம்பெற்றது.

கடந்த 17.11.1999 அன்று கடலோடு சங்கமித்திருந்த, பூரணமூர்த்தி-கந்தர்வன், சிவநாதன்-இரவிசங்கர், சுந்தரலிங்கம்-சிவோத்தமன் மற்றும் பாலகிருஸ்ணன்-பிரதீபன் ஆகியோருடன் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக இருந்த பொழுதில் 17.05.2004 அன்று இடம்பெற்ற புகையிரத விபத்தில் சிக்கி உயிரிழந்த மரியரட்ணம்-குணரட்ணம் ஆகியோரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஒன்றிணைந்து இந்நினைவேந்தல் நிகழ்வை நடத்தினர்.

இதேவேளை இம் மாணவர்களது நினைவேந்தல் மற்றும் குருதிக்கொடை முகாம் என்பன எதிர்வரும் 28 ஆம் திகதி ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எங்களுக்கு புத்திமதி சொல்வதை விட எஞ்சியிருக்கும்
# தமிழர்களுக்கு மறுவாழ்வை வழங்க
# ராஜபக்ஷ குடும்பம் முன்வர வேண்டும்

## நாமல் மீது திருமா சீற்றம்




(சென்னை)

**தமிழ் நாட்டுத் தலைவர்களுக்கு புத்திமதி சொல்வதை விட எஞ்சியிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பான மறுவாழ்வை வழங்க ராஜபக்ஷ குடும்பம் முன்வர வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் காட்டமாகத் தெரிவித்தார்.**

தமிழகத்திலுள்ள தமிழ் அரசியல்வாதிகள் தங்களுடைய சுயநல மற்றும் சந்தர்ப்பவாத அரசியல் தேவைகளுக்காக இலங்கை மக்களைப் பகடைக்காயாக பயன்படுத்தி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அறிக்கை வெளியிட்டிருந்தார்.

அத்துடன், தமிழகத்தில் தங்களது சுயநல சந்தர்ப்பவாத அரசியலைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறையுள்ளவர்களாகக் காட்டி முதலைக் கண்ணீர் வடிக்கும் தமிழக தமிழ் அரசியல்வாதிகளின் அறிக்கைகளை தான் அவதானித்ததாகவும் அதில் அப்பட்டமான சந்தர்ப்பவாத அரசியலைத் தவிர, வேறு எதுவும் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பில் வினவிய போது திருமாவளவன் மேலும் தெரிவிக்கையில்,

ராஜபக்ஷ குடும்பத்தின் வெற்றிக்கு தமிழ் நாட்டுத் தலைவர்கள் வாழ்த்துச் சொல்ல வேண்டுமென எப்படி எதிர்பார்க்கிறார்?. மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ வெளியிட்ட அறிக்கை வேடிக்கையாகவுள்ளது. ஈவிரக்கமின்றி அப்பாவித் தமிழர்களை இலட்சக்கணக்கில் கொன்று குவித்த ராஜபக்ஷ குடும்பத்திலிருந்து தமிழர்கள் மீது கரிசனம் காட்டும் குரல் ஒலிப்பது வெற்றிக்களிப்பின் ஆணவமாகவே வெளிப்படுகிறது.

தமிழ் நாட்டில் ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பதால் தமிழ் நாட்டுத் தலைவர்களுக்கு என்ன ஆதாயம் கிடைத்து விடும்?

ராஜபக்ஷ குடும்பத்தின் வெற்றி, தமிழர்களுக்கு மீண்டும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியதால் ஆத்திரமடைந்துள்ள நாமல் ராஜபக்ஷ எங்கள் மீது தனது ஆத்திரத்தைக் கொட்டியிருக்கிறார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


### பாகிஸ்தானுக்கு வாருங்கள்

## இந்தியாவையடுத்து இம்ரான் கானும் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு அழைப்பு

(இஸ்லாமாபாத்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் நாடும், இலங்கை மக்களும் அதிக வெற்றிகளையும் செழிப்பையும் அடைவார்கள் என்ற நம்பிக்கையுள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்தார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 7 ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக கோட்டாபய பதவிப்பிரமாணம் செய்துகொண்ட நிலையில் அவரை, வாழ்த்துவதற்காக தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய போதே இம்ரான் கான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



ஜனாதிபதி கோட்டாபயவின் தலைமை மற்றும் பார்வையில் இலங்கை மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை இந்தத் தேர்தல் பிரதிபலித்தது.

ஜனாதிபதி கோட்டாபயவின் கீழ் நாடும் அதன் மக்களும் அதிக வெற்றிகளையும் செழிப்பையும் அடைவார்கள் என்றும் இம்ரான் கான் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன் பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கிடையிலான இருதரப்பு உறவுகள் குறித்தும் இந்த உரையாடலில் கலந்தாலோசிக்கப்பட்டதுடன், பாகிஸ்தானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறும் இதன்போது இம்ரான் கான் கேட்டுக் கொண்டார்.

அதற்கிணங்க ஜனாதிபதி கோட்டாபய அவரின் அழைப்புக்கு இணக்கம் தெரிவித்தார். (இ-7)

## தனியார் பேருந்துச் சேவைகள் மென்மேலும் நவீன மயப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து ஏனைய மாவட்டங்களுக்கு போக்குவரத்தை மேற்கொள்ளும் வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) யாழ்.தூர சேவைப் பேருந்து உரிமையாளர் சங்கம் தனது பேருந்து உரிமையாளர்களுக்கு அதி நவீன முறையில் தயாரிக்கப்பட்ட கட்டணச் சிட்டை இயந்திரங்களை வழங்குவதுடன் GPS கருவிகளைப் பேருந்துகளில் பொருத்தி வலையமைப்பின் ஊடாக கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதனால், பயணிகளின் பாதுகாப்பு அவர்களின் இலகுவான பயணம், சேவைகளின் மேல் உள்ள நம்பகத்தன்மை என்பவற்றை மேம்படுத்தியுள்ளது.

இக் காரணிகளை மையமாகக் கொண்டு கடந்த 14 ஆம் திகதி மேற்படி நடவடிக்கைகளுக்கான முதல் முயற்சியாக யாழ்ப்பாணத்திலிருந்து வடமாகாணத்திற்குள் தூரசேவைகளை மேற்கொள்ளும் அனைத்து வழித்தட பேருந்து உரிமையாளர்களுக்கும் குறிப்பிட்ட கட்டணச் சிட்டை நவீன இயந்திரங்களை வடமாகாண ஆளுநர், சங்கத்தின் அனுசரணையுடன் வைபவரீதியாக வழங்கி வைத்தார்.

இவ்வலையமைப்பின் ஊடான சேவைகளால்,

பேருந்தின் வேகம், அதனுடைய தரிப்பு நேரநடவடிக்கைகள், போக்குவரத்து விதிகளை மீறும் செயல்கள், சேவை நேரங்கள் என்பன பேருந்தின் உரிமையாளராலும் சங்கத்தினாலும் கண் காணிக்க முடியும்.

பயணிகள் தாங்கள் பயணிக்கும் பேருந்தின் இலக்கம் அதன் Travels பெயர், பேருந்தில் ஏறிய இடம், இறங்க வேண்டிய இடம், அதற்கான நிர்ணயிக்கப்பட்ட கட்டணம், மிகுதிப்பணம் என்பவற்றை இயந்திரத்தால் பெறப்படும் கட்டணச்சிட்டை மூலம் தெரிந்து கொள்ளலாம்.

அத்துடன் உரிமையாளரால் தனது பேருந்தில் பயணிக்கும் ஒவ்வொரு பயணியும் கட்டணமாகச் செலுத்தும் தொகையை தான் வீட்டில் இருந்து கொண்டே கைத்தொலைபேசியில் அவதானிக்க முடியும்.

இதனால் உரிமையாளர்களும் பயணிகளும் நன்மை அடைவார்கள்.

இந்த நடவடிக்கை முதற்கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வடமாகாணத்திற்குள் உள்ள ஏனைய மாவட்டங்களுக்கு தூர சேவைகளை மேற்கொள்ளும் பேருந்துகளுக்கு வழங்கப்படுகின்றன.

அடுத்தடுத்த கட்டங்களாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டச்சங்கங்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் வெளிநாடுகளில் நடைமுறையில் உள்ளது போல "பயண அட்டைகள்" அதாவது பயணிகளுக்கும் மாணவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கான பருவகால பயண அட்டைகள் என்பனவும் வழங்கத் திட்டமிட்டுள்ளதாக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சி.சிவபரன் தெரிவித்தார். (இ

## காலியில் டொனேடோ சூறாவளி 74 பேர் பாதிப்பு;11 வீடுகள் சேதம்



(காலி)

காலி, வதுரம்ப மெதகீஒய பகுதியில் ஏற்பட்ட டொனேடோ சூறாவளி காரணமாக 20 குடும்பங்களைச் சேர்ந்த 74 பேர் பாதிக்கப்பட்டனர். அத்தோடு, 11 வீடுகள் சேதமடைந்துள்ளதாக காலி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

பயிர் நிலங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக அந்த நிலையம் மேலும் தெரிவித்தது. மேலும் இந்த அனர்த்தம் காரணமாக பாரிய மரங்களும் சரிந்து விழுந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## தமிழர் பகுதிகளில் இடம்பெற்ற

# தாக்குதல் சம்பவங்கள் தேர்தலுடன் தொடர்பற்றவை

## பொலிஸ் பேச்சாளர் விளக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து, மலையகத்தின் தமிழர் பகுதிகளில், தேர்தலை மையப்படுத்திய பல தாக்குதல் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதாக பொது மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனினும் அவ்வாறு பதிவானதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவங்கள் தேர்தலுடன் தொடர்பற்றவை எனவும் அவை தனிப்பட்ட சம்பவங்கள் எனவும், தாக்குதலுக்குள்ளானோர் அதனை தேர்தல் சம்பவமாக காட்ட முற்படுவதாகவும் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு கணேமுல்ல தோட்டத்தில் தாக்குதல் சம்பவமொன்று இடம்பெற்றது.

குறித்த பகுதியிலுள்ள வீடுகளுக்குள் ஒரு குழுவினர் நுழைந்து தாக்குதல் நடத்தி, வீட்டின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாகவும், வீட்டில் இருந்த பெண்ணுடன் தவறாக நடக்க முற் பட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு வீடு புகுந்தவர்கள் "யாருக்கு வாக்களித்தீர்கள் எனக் கோரியவாறே இவ்வாறு அராஜகத்தில் ஈடுபட்டதாக மக்கள் தெரிவித்தனர். இதேவேளை கண்டி - ரங்கல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட துனிஸ்கல தோட்டத்தில் ஜனாதிபதி தேர்தல் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட ஒரு குழுவினர், சில தமிழ் மக்களின் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தியதாகவும் அப்பகுதி மக்கள் கூறினர். இதில் காயமடைந்த இளைஞர் ஒருவர் மடுல்கலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் மக்கள் தெரிவித்தனர்.


இச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில், பொலிஸ் பேச்சாளர் தெரிவிக்கையில்,

கணேமுல்ல தோட்டத்தில் மதுபோதையில் இருவருக்கு இடையே இடம்பெற்ற வாய்த்தர்க்கம் தாக்குதலாக மாறியதாகவும் அந்த தாக்குதல் தொடர்பில் 119 பொலிஸ் அவசர அழைப்பு இலக்கத்துக்கு கிடைத்த தகவலுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

உண்மையில் சமூக வலைத்தளங்களில் இந்தச் சம்பவம் தொடர்பில் பரவும் காணொலியில் உள்ளதைப் போன்று இந்தச் சம்பவம் தேர்தலுடன் தொடர்புபட்டது அல்ல. முற்றிலும் மது போதையில் இருந்த இருவருக்கு இடையே இடம்பெற்ற தனிப்பட்ட தாக்குதல் சம்பவம்.

யாரும் வீணாக அச்சமடையத் தேவையில்லை. இந்த தனிப்பட்ட சம்பவங்களை தேர்தலுடன் தொடர்புடையதாக தாக்குதலுக்கு உள்ளானவர்கள் காட்ட முற்பட்டுள்ளதாக தோன்றுகின்றது. இவ்வாறான பல தனிப்பட்ட சிறு தாக்குதல்கள் பதிவாகியுள்ளன. அவை எவையும் தேர்தலுடன் தொடர்பானவை அல்லஎன்றும்அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மருத்துவமனை கட்டடத்தில் தீ



(காலி)

காலி-கராப்பிட்டிய பகுதியிலுள்ள தனியார் மருத்துவமனை கட்டடமொன்றின் 5 ஆவது மாடியில் நேற்றுக்காலை தீ விபத்து ஏற்பட்டது.

இருப்பினும் காலி மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் குறித்த தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். (இ-7)

# அனைத்து மக்களுக்கும் சமனான ஆட்சியை வழங்க வேண்டியது கோட்டாபயவின் கடமை - கமல்



(சென்னை)

மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் என்ற ரீதியில் அனைத்து மக்களுக்குமான ஆட்சியை வழங்க வேண்டியது நல்ல தலைவரின் கடமை என மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும் நடிகருமான கமல்ஹாசன் தெரிவித்தார்.

ஒடிசா மாநிலத்தில் வழங்கப்பட்ட கௌரவ கலாநிதிப் பட்டத்தை பெற்றுக்கொண்டு நேற்றுத் தமிழகம் திரும்பிய அவர் சென்னையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

இதன்போது இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் வாக்களிக்காத நிலையில், ஈழத்தமிழர்களுக்கு ஏற்படப்போகும் மாற்றம் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "நல்ல தலைவராக அவர் இருக்க வேண்டும் என நினைக்கும் பட்சத்தில் நல்ல ஆட்சியை வழங்க வேண்டியது அவரது கடமை. இது நாட்டு மக்களின் தீர்ப்பு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி அனைத்து மக்களுக்கு சமனான ஆட்சியை வழங்க வேண்டியது கடமை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1894

### தர்ஷா




### மலர்




### விதுஷன்




### சுஜீவன்




### தனம்





### பாலு




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஜனாதிபதி கோட்டாவின் செயற்பாடுகளுக்கு தாக்குதல்களால் குந்தகம் ஏற்படலாம்

## சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இராதாகிருஷ்ணன் அவசர கோரிக்கை



(கொழும்பு)

தமிழ் மக்களோ முஸ்லிம் மக்களோ இனவாதிகள் அல்லர். அவர்கள் வாக்களித்ததும் ஒரு சிங்கள பௌத்த ஜனாதிபதி வேட்பாளருக்கே. அவர்கள் இனவாதிகளாக இருந்திருந்தால் நிச்சயமாக தமிழர்கள் சிவாஜிலிங்கத்துக்கும் முஸ்லிம்கள் ஹிஸ்புல்லாவுக்கும் வாக்களித்திருக்க வேண்டும். தேர்தல் தினத்தன்றும் தேர்தல் முடிவடைந்த பின்பும் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் காரணமாக புதிய ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு குந்தகம் ஏற்படலாம். எனவே இதற்கான உரிய நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். அதே நேரம் தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னரான நிலைமைகள் தொடர்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


தேர்தல் தினத்தன்று தெரணியகலை நூரி தோட்டத்தில் எமது மக்கள் மீதான தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து கடந்த 18 ஆம் திகதியன்று யட்டியாந்தோட்டை கணேபொல மேல் பிரிவிலும் தாக்குதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் புதிதாக பதவியேற்றுள்ள ஜனாதிபதியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துமே தவிர அவர் மீது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தப் போவதில்லை. நடந்து முடிந்துள்ள தேர்தலில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் மனதை வென்றெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து நடைபெறவுள்ள பாராளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்கின்ற வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்தச் சம்பவத்தில் நேரடியாக அரசியல் தலைவர்கள் சம்பந்தப்பட்டிருக்கமாட்டார்கள் என நான் நினைக்கின்றேன். ஆனாலும் தங்களுடைய ஆதரவாளர்களை இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்பதை அவர்கள் அறிவுறுத்த வேண்டும் எனவும் தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-7)

# வீதியில் கழிவு நீர்; மக்கள் அசௌகரியம்

## முதல்வர் ஆனல்ட் உடனடி நடவடிக்கை







(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குட்பட்ட புங்கன்குளம் பகுதியில் (புறூடி வீதிக்கு முன்னால் அமையப் பெற்றுள்ள ஒழுங்கை) நபர் ஒருவர் தனது வீட்டுக் கழிவு நீரை பொது மக்கள் போக்குவரத்திற்கு அன்றாடம் பயன்படுத்திவரும் வீதிக்கு விட்டமையால் அவ் வீதியூடாக போக்குவரத்து செய்து வரும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வந்தனர்.

மேலும் குறித்த வீதியில் தேங்கி நிற்கும் கழிவு நீரினால் டெங்கு அபாய அறிகுறிகள் காணப்படுவதுடன், வீதியும் பயன்படுத்த முடியாதுள்ளதாக அப்பகுதி பொது மக்களால் மாநகரசபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த முறைப்பாட்டிற்கு அமைய மாநகர சுகாதாரப் பிரிவினால் வீட்டு உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்விடயம் நேற்று முன்தினம் யாழ். மாநகர முதல்வரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இவ்விடயத்தை அறிந்த முதல்வர் அப்பகுதிக்கு நேரடியாகச் சென்று ஆராய்ந்தார். குறித்த விடயம் தொடர்பில் உரிய வீட்டு உரிமையாளருக்கு மாநகர சட்ட விதிமுறைகள் குறித்து முதல்வரால் விளக்கப்பட்டதுடன் உரிய முறையில் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடந்து கொள்ளும்படியும் கூறப்பட்டது.

இது தொடர்பான பொது மக்களின் முறைப்பாட்டிற்கமைய மேலதிக சட்ட நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். மாநகர முதல்வரின் இந் நேரடிக் கள விஜயத்தில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பாளர் (HQI), யாழ்ப்பாணம் பொலிஸார், யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவினர், சுகாதார மேற்பார்வையாளர்கள், மாநகர உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-5)

# செய்தித்துளிகள்

## வெளிநாட்டில் குடியேற சந்திரிகா முடிவு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் வெளிநாட்டில் குடியேறுவதற்குத் தயாராகி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக சந்திரிகா செயற்பட்டார். எனினும் சஜித்தின் தோல்வியின் பின்னர் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேற அவர் தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றுவதாக அவர் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில் அவர் வெளிநாடு செல்லத் தீர்மானித்தமையால், அவரால் வழிநடத்தப்படுகின்ற அமைப்பிற்கு தற்போது பாரிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (இ-7)

### ஜா - எல பகுதியில்

## ஹெரோயினுடன் மூவர் கைது!

(ஜா-எல)

ஜா-எல-எவரியவத்த பகுதியில் பொலிஸ் அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது ஹெரோயின் போதைப் பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த மூவரும் பயணித்த ஆட்டோவை நிறுத்திச் சோதனை செய்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் சந்தேகநபர்களிடமிருந்து 6 கிராம் 180 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன், அவர்கள் பயணித்த ஆட்டோவும் பறிமுதல் செய்யப்பட்டதாகத் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் 21 முதல் 26 வயதுக்குட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வாக்குப்பெட்டிகளை என்ன செய்வது? தேர்தல்கள் ஆணைக்குழு பரிசீலனை

(கொழும்பு)

2019 ஜனாதிபதித் தேர்தலில் வாக்கெடுப்புக்கு வாக்குப் பெட்டிகளாகப் பயன்படுத்தப்பட்ட கார்ட்போர்ட் பெட்டிகளை விற்பனை செய்வதா? அல்லது மீள்சுழற்சி செய்வதா? என்பது குறித்து பரிசீலித்து வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

2019 ஜனாதிபதித் தேர்தலில் கிட்டத்தட்ட 13 ஆயிரம் கார்ட்போர்ட் வாக்குப் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.


இந்நிலையில் இது குறித்த தீர்மானம் விரைவில் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 150 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 300 | 280 | 250 | 270 | 300 |
| தக்காளி | 100 | 80 | 100 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 100 | 80 | 80 |
| கோவா | 140 | 130 | 120 | 110 | 160 |
| கரட் | 200 | 300 | 240 | 200 | 350 |
| பூசணி | 50 | 70 | 60 | 200 | 60 |
| புடோல் | 80 | 80 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 120 | 130 | 150 |
| பாகற்காய் | 200 | 250 | 160 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 60 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 80 | 80 | 120 |
| பயற்றங்காய் | 120 | 160 | 140 | 130 | 160 |
| லீக்ஸ் | 250 | 230 | 300 | 200 | 350 |
| பீற்றூட் | 150 | 100 | 200 | 60 | 200 |
| கறிமிளகாய் | 250 | 260 | 240 | 220 | 240 |
| முருங்கைக்காய் | 400 | 800 | 400 | 300 | 320 |
| போஞ்சி | 140 | 100 | 120 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 80 | 100 | 80 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 80 | 40 | 50 |
| தேசிக்காய் | 150 | 300 | 160 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 40 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | — | 300 | 150 | 280 |
| வெங்காயப்பூ | 350 | — | — | — | — |
| முள்ளங்கி | 150 | 100 | 100 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | 60 | 120 | 60 | 160 | 100 |




# எதிர்பாராத விருந்தாளி



தங்களைப் பார்க்க வந்த முனிவர்களை உபசரித்து, உணவளித்து, அவர்கள் விடைபெற்றுச் சென்றதும், பாண்டவர்கள் உணவருந்த அமர்ந்தனர்.

"திரெளபதி! இன்று என்ன சமையல்?" என்றான் பீமன் சிரித்துக்கொண்டே. "அட்சய பாத்திரம் நமக்கு இன்று என்ன வழங்குகிறதோ அதைத்தானே நாம் உண்ண முடியும்?" என்றான் யுதிஷ்டிரன். அட்சய பாத்திரத்திலிருந்து திரெளபதி அனைவருக்கும் உணவு பரிமாறினாள்.

"சூரிய பகவான் நமக்கு இந்த அட்சய பாத்திரத்தை வழங்காமல் இருந்திருந்தால் நம்மால் இந்த வனவாசத்தைச் சமாளித்திருக்க முடியுமா?" என்றான் நகுலன். "நாம் வனவாசத்தைச் சமாளிப்பதில் ஒரு சிரமும் இருந்திருக்காது. ஆனால் நாளும் நம்மைக் காண முனிவர்களும் மற்றவர்களும் வருகிறார்களே, அவர்களுக்கு நம்மால் விருந்தளிக்க முடியாமல் போயிருக்கும்" என்றான் அர்ஜுனன்.

"அள்ள அள்ளக் குறையாத இந்த அட்சய பாத்திரத்தை யுதிஷ்டிரரின் வேண்டுகோளை ஏற்று சூரியன் நமக்கு வழங்கியிருக்கிருக்கிறார். இதற்காக சூரியனிடம் பிரார்த்தனை செய்யும்ப்டி நமக்கு யோசனை சொன்ன தௌம்யருக்குத்தான் நாம் நன்றி சொல்ல வேண்டும்" என்றாள் திரெளபதி.

"ஆனால் அட்சய பாத்திரத்தைக் கழுவி வைத்து விட்டால் அதற்குப்பிறகு அடுத்த நாள்தான் அதிலிருந்து உணவு வரும் என்பதுதான் சிக்கல். இதனால்தானே நாம் எல்லோரும் சாப்பிட்ட பிறகு திரெளபதி பாத்திரத்தைக் கழுவி வைத்த பின் தன் சீடர்களுடன் வந்த துருவாசருக்கு உணவளிக்க முடியாமல் அவருடைய சாபத்துக்கு ஆளாக இருந்தோம்!" என்றான் பீமன்.

"கண்ணனின் கருணையினால் அன்று நாம் தப்பித்தோம்" என்றான் அர்ஜுனன்.

"சகாதேவா, நீ ஏன் எதுவுமே சொல்லவில்லை?" என்றான் யுதிஷ்டிரன்.

"அண்ணா! நாம் கானகத்தில் இருந்தாலும் நாம் "கிருஹஸ்தாஸ்ரமம்" என்று சொல்லப்படும் இல்லற தர்மத்தைத்தானே கடைப்பிடிக்கிறோம்?" என்றான் சகாதேவன். "ஆமாம்" என்றான் யுதிஷ்டிரன்.

"இல்லறத்தில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான கடமை என்ன?" "விருந்தினர்களை உபசரிப்பது" என்றான் யுதிஷ்டிரன். "அதை நாம் செய்து கொண்டிருக்கிறோமா?"

"இதென்ன கேள்வி சகாதேவா? நாள்தோறும் பல முனிவர்களும் இந்தக் காட்டில் வசிக்கும் மக்களும் நம்மைப் பார்க்க வருவதையும் நாம் அவர்களுக்கு விருந்தளிப்பதையும் நீ பார்த்துக்கொண்டுதானே இருக்கிறாய்?" என்றான் அர்ஜுனன் சற்றே கோபத்துடன்.

"பொறு அர்ஜுனா? சகாதேவன் என்ன சொல்ல வருகிறான் என்பது எனக்குப் புரிகிறது. அதை அவன் வாயாலேயே சொல்லட்டும்" என்றான் யுதிஷ்டிரன்.

"உங்கள் மனதில் இருப்பதை என் வாயிலிருந்து வரவழைக்க விரும்புகிறீர்கள்! சொல்கிறேன். நாம் விருந்தினரை உபசரிப்பது உண்மைதான். ஆனால் அட்சய பாத்திரத்தை வைத்துக் கொண்டுதான் அனைவருக்கும் உணவளிக்கிறோம்? இதில் நமது முயற்சி, நமது பங்கு என்ன இருக்கிறது?"

"அட்சய பாத்திரத்தைத் தூக்கிப் போட்டு விட வேண்டும் என்கிறாயா?" என்றான் பீமன். ஆனால் யுதிஷ்டிரன் தீவிர யோசனையில் ஆழ்ந்தான். "எல்லோரும் சீக்கிரம் சாப்பிட்டு முடியுங்கள். நானும் சாப்பிட்டு விட்டுப் பாத்திரத்தைக் கழுவி வைக்க வேண்டும்" என்றாள் திரெளபதி.

"பாத்திரத்தைக் கழுவி வைத்த பிறகு அன்று துர்வாசர் வந்தது போல், இன்று வேறொருவர் வந்தால் நாம் என்ன செய்யப் போகிறோம்?" என்றான் சகாதேவன். "அப்படி ஒருவர் வந்து, அட்சய பாத்திரத்தின் உதவி இல்லாமலே நாம் அவருக்கு உணவு படைத்தால் அதுதான் உண்மையான விருந்தோம்பல் என்று தம்பி சகாதேவன் சொல்ல வருகிறான்" என்றான் யுதிஷ்டிரன் புன்னகையுடன். மற்ற மூன்று சகோதரர்களும் வியப்புடன் சகாதேவனைப் பார்த்தனர்.

சகாதேவன் சுட்டிக்காட்டிய நிலை ஒருநாள் வந்தது. விருந்தினர்களுக்கு உணவளித்துப் பாண்டவர்கள் உண்டபின் தானும் உண்டுவிட்டு திரெளபதி பாத்திரத்தைக் கழுவி வைத்த சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்களைத் தேடி ஒரு முனிவர் வந்தார்.

"நீண்ட தொலைவிலிருந்து வருகிறேன்" என்று அவர் கூறியதிலிருந்தும் அவருடைய வாடிய முகத்திலிருந்தும், அவருடைய உடல் சோர்விலிருந்தும் அவர் உணவருந்தி வெகு நேரம் (அல்லது பல நாட்கள் கூட) ஆகியிருக்கும் என்பதை அனைவரும் உணர்ந்தனர். "இப்போது என்ன செய்யப் போகிறோம்? கிருஷ்ணன் தானே வருவானா அல்லது அர்ஜுனனோ, திரெளபதியோ அவனை தியானம் செய்து வரவழைக்கப் போகிறார்களா?" என்றான் பீமன் விளையாட்டாக.

"அன்று துருவாசர் வந்தபோது அட்சய பாத்திரத்தின் அடியில் ஒரு கீரைத்துண்டு ஒட்டிக் கொண்டிருந்தது. கிருஷ்ணன் அதை உண்டதும் துருவாசருக்கும் அவர் சீடர்களுக்கும் வயிறு நிரம்பி விட்டது. அதற்குப் பிறகு பாத்திரத்தை மிகவும் கவனமாகக் கழுவுகிறேன். அதனால் இப்போது கிருஷ்ணன் வந்தால் கூடப் பாத்திரத்திலிருந்து எடுத்து உண்ண ஒரு துகள் கூட இருக்காது!" என்றாள் திரெளபதி.

"ஒவ்வொரு முறையும் கிருஷ்ணன் வந்து உதவுவான் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. இந்த முறை அண்ணன் பீமனே நமக்கு உதவலாம்" என்றான் சகாதேவன். "ஆமாம். பீமா! உன்னால்தான் விரைந்து செயற்பட முடியும். இந்தக் காட்டில் விரைந்து தேடி முனிவர் உண்ணச் சில பழங்களையும் காய்களையும் பறித்துவா. நாங்கள் முனிவரை உபசரித்து, அவரது கால்களைக் கழுவி, அவரை வணங்கி நலம் விசாரிப்பதற்குள் நீ திரும்பி வர வேண்டும்" என்றான் யுதிஷ்டிரன்.

"விருந்தினருக்குக் காய்கனிகளை மட்டும் உணவாக அளிப்பது பொருத்தமாக இருக்குமா? அவற்றை அவரே மரங்களிலிருந்து பறித்துக் கொண்டிருப்பாரே!" என்றான் அர்ஜுனன்.

"நம் வீட்டுக்கு வரும் விருந்தினர் எவரும் தன்னால் உணவைத் தேடிக்கொள்ள முடியவில்லை என்பதற்காக வரவில்லை. நம்மிடம் உள்ள அன்பு காரணமாக வருகிறார்கள். நம்மிடம் என்ன இருக்கிறதோ அதைக் கொடுத்து உபசரிப்பதுதான் விருந்தோம்பல். ஒரு ஏழையின் வீட்டுக்கு ஒரு செல்வந்தன் வந்தால் அந்த ஏழை தன் வீட்டில் என்ன உணவு இருக்கிறதோ அதைத்தானே அந்த செல்வந்தனுக்குக் கொடுக்க முடியும்?

"ராமபிரான் சபரியின் குடிலுக்கு வந்தபோது, சபரி அவருக்குப் பழங்களையும், புலாலையும்தான் கொடுத்தாள். அதுவும் அவை நன்றாக இருக்கின்றனவா என்று சுவைத்துப் பார்த்து விட்டுக் கொடுத்தாள். அந்த எச்சில் பட்ட உணவை ராமபிரான் மனமுவந்து ஏற்கவில்லையா?" என்றான் யுதிஷ்டிரன். "ஆனால் முனிவர் நாம் கொடுக்கும் பழங்களினால் திருப்தி அடையாமல் நம்மைக் கோபித்துக் கொண்டால்?" என்றாள் திரெளபதி.

"நல்லவேளை இந்த முனிவர் துருவாசர் இல்லை!" என்றான் சகாதேவன் சிரித்தபடி.

பீமன் கொண்டு வந்த காய்கனிகளை நறுக்கி இலையில் வைத்து முனிவருக்குப் பரிமாறினார்கள். முனிவர் எதுவுமே சொல்லாமல் அவற்றை உண்டார். உண்டு முடித்ததும் அவர்களிடம் விடைபெற்றார்.

யுதிஷ்டிரன் பணிவுடன் "முனிவர்பிரானே! இந்த நேரத்தில் எங்களால் உங்களுக்குச் சமைத்த உணவை அளிக்க முடியவில்லை, அதனால்தான் காய்கனிகளைப் பரிமாறினோம். எங்களை மன்னிக்க வேண்டும்" என்றான்.

"யுதிஷ்டிரா! நான் இப்போது சமைத்த உணவை உண்பதில்லை என்ற ஒரு விரதத்தை மேற்கொண்டிருக்கிறேன். பச்சைக் காய்களையும், பழங்களையும்தான் உண்கிறேன். எங்கே நீங்கள் சமைத்த உணவைப் படைத்து விடுவீர்களா என்று பயந்தேன்.

"ஒரு விருந்தினர் தனக்கு இந்த உணவைத்தான் அளிக்க வேண்டும் என்று விருந்தளிப்பவரிடம் கேட்கக்கூடாது. அதனால்தான் எனக்குக் காய்கனிகளையே கொடுங்கள்" என்று நான் முன்பே உங்களிடம் சொல்லவில்லை.

"ஒருவேளை நீங்கள் எனக்குச் சமைத்த உணவை அளித்திருந்தால் அதன் மீது நீர் தெளித்து ஏற்றுக்கொண்டு விட்டு அதை வெளியே உள்ள மிருகங்களுக்கோ பறவைகளுக்கோ அளித்திருப்பேன். என் பசி அடங்காவிட்டாலும் எனக்குத் திருப்தி ஏற்பட்டிருக்கும் என்றாலும் உங்களுக்கு மனம் வருத்தம் ஏற்பட்டிருக்கும். "இறைவன் அருளால் நான் உண்ணக்கூடிய உணவையே எனக்கு அளித்து என் மனத்தையும் வயிறையும் ஒருங்கே நிறையச் செய்ததுடன் உங்களுக்கும் மனத்திருப்தி ஏற்படும் வகையில் செயற்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்கு எல்லா நலன்களும் விளையட்டும்" என்று வாழ்த்தி விடைபெற்றார் முனிவர்.

குறள் 81

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற்பொருட்டு.

பொருள்: மனைவியுடன் கூடி இல்லறம் நடத்துவதன் நோக்கம் விருந்தினர்களைப் போற்றி அவர்களுக்கு நன்மை செய்வதே ஆகும்.

## பொது அறிவு வினா விடைகள்

- இலங்கையில் எத்தனை தேர்தல் மாவட்டங்கள் உள்ளன?
  22
- இலங்கை எப்போது (பிரித்தானியவிடம் இருந்து) சுதந்திரம் பெற்றது?
  04.02.1948 இல்
- இலங்கை அரசை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
  இலங்கை சனநாயக சமத்துவ குடியரசு (Democratic Socialist Republic of Sri Lanka)
- இலங்கையில் உயர்ந்த நீர்வீழ்ச்சி எது?
  பம்பரகந்த
- இலங்கையில் நீளமான ஆறு எது?
  மகாவலி கங்கை 335 கி. மீ
- இலங்கையின் தலைப்பட்டினம் எது?
  ஸ்ரீ ஜெயவர்த்தனபுர

## பழமொழிகள்

- எருமை வாங்கும் முன்னே நெய் விலை கூறாதே.
- சைகை அறியாதவன் சற்றும் அறியான்.
- இறைக்கிற ஊற்றே சுரக்கும்.
- கரும்பு விரும்ப அது வேம்பாயிற்று.
- பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டாதே.
- மாடம் இடிந்தால் கூடம்.
- செலவில்லாச் செலவு வந்தால் களவில்லாக் களவு வரும்.
- எடுப்பார் மழுவை, தடுப்பார் புலியை, கொடுப்பார் அருமை.
- கடலுக்குக் கரை போடுவார் உண்டா?

நீங்கள் வாழ்வதோடு, பிறர் வாழவும் வழிவகை செய்யுங்கள்.

– சர் ரோஸர்லெஸ்ட் ரேஞ்ச்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாருக்கும் நன்மை செய்யாதவரோடு கூட்டுச் சேர்ந்த தமிழ்க் கூட்டமைப்பை...

இந்த நாட்டின் ஆறாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன இப்போது முன்னாள் ஜனாதிபதி என விழிக்கப்படுகின்றார்.

மகிந்த ராஜபக்ஷவோடு போட்டியிட்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றவர் மைத்திரிபால சிறிசேன.

ஜனாதிபதித் தேர்தலில் என்னோடு போட்டியிட இருக்கின்ற அந்த வீரனை அறிய ஆசைப்படுகிறேன் என மகிந்த ராஜபக்ஷ கர்ச்சித்த போது அவர் அருகிலேயே நின்றவர் மைத்திரிபால சிறிசேன.

மிகுந்த துணிச்சலும் நேர்மையும் அவரிடம் இருந்தன. தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் நேரிய முறையில் சிந்தித்தவர்.

எனினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சேர்ந்து கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஓரங்கட்டியது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு வருகின்றபோதெல்லாம் கொழும்பில் இருந்து ஓடிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் யாழ்ப்பாண விஜயத்தின் போதெல்லாம் எட்டவே நின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எல்லாம் செய்வார் என்பதுபோல் கூட்டமைப்பு நடந்து கொண்டதைப் பார்க்கும்போது எங்கள் இனத்துக்கான மிகப்பெரும் கேடு இதுவென்று உணரத் தோன்றும்.

அதுமட்டுமன்றி வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை ஓரங்கட்டுவதில் கூட்டமைப்பும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் செய்த கூட்டுச்சதியை என்னவென்று சொல்வது.

ஆம், தந்தி தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியொன்றில்; வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் நான் கதைக்கமாட்டேன். முன்பும் கதைத்ததில்லை. இனியும் கதைக்கப் போவதில்லை என்று பிரதமர் ரணில் கூறுகிறார். .

இதன்போது செவ்வி கண்ட ஊடகவியலாளர் அதிர்ந்து போனார்.

ஒரு பிரதமர் என்ற வகையில் நீங்கள் வடமாகாணத்தின் முதலமைச்சரோடு கதைக்காமல் எங்ஙனம் வடக்கில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்று அந்த ஊடகவியலாளர் கேட்க,

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களோடு கதைத்து அபிவிருத்தியை ஏற்படுத்துவேன் என்கிறார் ரணில்.

இதன்போதாவது எங்கள் இனத்துக்கு ஈனம் இழைக்கப்படுகிறது என்பதைக்கூட உணரமுடியாதவர்களாக நாம் இருந்தோம்.

அதுமட்டுமல்ல ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பிரதமர் ரணில் செய்த அக்கிரமங்கள், சேர்ந்து பயணிப்போம் என்ற சத்தியத்துக்கு இழைத்த பெரும் துரோகமாகும்.

மைத்திரிபால சிறிசேனவோடு மட்டும் ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரம் முடியவில்லை. அது சஜித் பிரேமதாஸவையும் நம்ப வைத்துக் கழுத்தறுத்தது.

எனவே இத்தகையவரோடு கூட்டு நின்ற நம் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் எப்பேர்பட்டவர்கள் என்பதை இனிமேலாவது நம் தமிழினம் உணர்ந்தாக வேண்டும்.

# பாதுகாப்பு வாகனப் பேரணியை மட்டுப்படுத்த ஜனாதிபதி தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதிக்காக வழங்கப்படும் பாதுகாப்பு வாகன பேரணியை மட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

பொதுவாக ஜனாதிபதி ஒருவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பு வாகனப் பேரணியில் அம்புலன்ஸ் உட்பட 15 - 20 வாகனங்கள் தொடரணியாகப் பயணிக்கும்.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் புதிய தீர்மானத்திற்கமைய அந்த வாகனங்களின்எண்ணிக்கையை 2 அல்லது 3 ஆக குறைக்க திட்டமிட்டார். அத்துடன் பொலிஸ் மோட்டார் சைக்கிள்கள் சிலவற்றை மாத்திரம் உள்ளடக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வாகன பேரணி செல்லும் போது வீதிகள் மூடப்படுவது வழமையாகும். எனினும் இனிமேல் அவ்வாறு மூடாமல் இருப்பதற்கு ஜனாதிபதி தீர்மானத்திற்கு வந்துள்ளார். அதேவேளை ஜனாதிபதி ஒருவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையை 1200 இலிருந்து 200 ஆக குறைக்க ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார். (ஐ)

# சாந்த அபேசேகரவின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

பிணை நிபந்தனையை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகரவை எதிர்வரும் ஜனவரி மாதம் 17 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு சிலாபம் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 2004 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட நிலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி அவருக்கு பிணை வழங்கப்பட்டதுடன், பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 9 மணிக்கும் 12 மணி இடைப்பட்டதொரு நேரத்தில் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம்இடவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டிருந்தது.

பின்னர் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 45 ஆம் திகதி பிரதிவாதியின் தரப்பினரால் சிலாபம் மேல் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்த கோரிக்கைக்கு அமைய, வாராந்தம் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டு, ஒவ்வொரு மாதாந்தத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமை சிலாபம் பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையொப்பமிட வேண்டும் என நீதிமன்றம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், சந்தேகநபர் நிபந்தனையை மீறியிருப்பதாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் அவர் கடந்த ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்திய நிலையிலேயே அவரை எதிர்வரும் ஜனவரி மாதம் 17 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு சிலாபம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆஸ்துமாவைக் கண்டறிய நவீன பரிசோதனை முறை

(கொழும்பு)

எம்மில் பலருக்கு கோடை காலம், குளிர் காலம், பனிக் காலம், மழைக்காலம் என ஒவ்வொரு பருவ காலத்திற்கு ஏற்ற வகையில் ஒவ்வாமை ஏற்பட்டு, அதன் காரணமாக ஆஸ்துமா பாதிப்பிற்குள்ளாகிறார்கள்.

இவர்களுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் காரணிகளை கண்டறியும் பரிசோதனையை செய்து, அதன் மூலம் ஒவ்வாமையைத் தூண்டும் காரணிகளை தவிர்த்தால் ஆஸ்துமா பாதிப்பிலிருந்து முழுமையாக நிவாரணம் பெறலாம்.

பொதுவாக கோடைகாலங்களில் காற்றில் மாசு பறக்கும். அதிலும் குறிப்பாக வீடு மற்றும்அலுவலகத்தில்உள்ள புறச்சூழலில் தூசுகள் காற்றில் மிதக்கும். இவற்றை சுவாசிக்கும் பொழுது ஒவ்வாமை ஏற்பட்டு, அதன் காரணமாக ஆஸ்துமா பாதிப்பு உருவாகிறது.

சிலருக்கு கோடையில் மலரும் மலர்களால் அதன் மகரந்தங்களால் ஒவ்வாமை ஏற்பட்டு, அதன் காரணமாக ஆஸ்துமா பாதிப்பு உண்டாகும். சிலருக்கு சில வகையான உணவின் காரணமாகவும் ஆஸ்துமா பாதிப்பு உண்டாகும்.

வைத்தியர்களை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டால், அவர்கள் Skin Prick Test மற்றும் Intra dermal Test என்ற இரண்டு வகையான பரிசோதனைகளை மேற்கொள்ள பரிந்துரைப்பார்கள்.

இவ்விரண்டு பரிசோதனைகளின் முடிவில் உங்களுக்கு ஒவ்வாமையை தூண்டக்கூடிய காரணிகளைப் பற்றித் துல்லியமாக தெரிந்து கொள்ளலாம்.

அதன் பிறகு அதனை தவிர்ப்பதன் மூலம் ஆஸ்துமா பாதிப்பிலிருந்து விடுபட முடியும். (ஐ)

## ஒளி விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் ஒளி விழா நாளை 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் கு. ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக அருட்தந்தை அ. லியான்ஸ் கலந்து கொள்வார். (இ-5)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

" மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை. "

-ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

தன் மனதை சுதந்திரமாக வைத்துக்கொள்ளும் எவனும் அடிமை இல்லை. தன்னம்பிக்கையின் குறைவே அதிருப்தி. அது நெஞ்சுரத்தின் குறைபாடு.

- எமர்ஸன்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் உன்னாப்பிலவு, முல்லைத்தீவு நகரம், கள்ளப்பாடு, வண்ணாங்குளம், வட்டுவாகல், கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அலுவலகம், ஓஷன் Park ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம், பெரியகாடு, பீடியா பாம், மெனிக் பாம், ஆண்டிய புளியங்குளம், கிறிஸ்தவ குளம், சக்திகம, முகத்தான்குளம், கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

## சத்திய தரிசனம்

### வெளிப்படையாகப் பேசுங்கள்



❖ பெண்களே! குணநலன் -சரியில்லாத கணவரைக் கண்டு கலங்காதீர்கள். அவர் மீது அன்பு செலுத்துவதே, அவரை திருத்துவதற்கான முதல் வழி. அன்பு செலுத்துபவருக்கு கடவுளின் ஆசிர்வாதம் கிடைக்கும்.

❖ துன்பங்களை சந்தித்தவர்களால் மட்டுமே, பிறரது துன்பங்களை அறிந்து கொண்டு, அவர்கள் மீது கருணை செலுத்த முடியும்.

❖ சமுதாயத்திற்கு செய்யப்படும் தீங்கு, நாட்டையும் பாதிக்கும். நாட்டின் நலன் சமுதாயத்தை முன்நிறுத்தியே இருக்கிறது

❖ கடவுள் மீது பக்தி கொண்ட உலகம், பக்தி செலுத்தாத உலகத்திலிருந்து வெகு தொலைவில் இருக்கிறது

❖ யாருக்கும் தெரியாமல் ரகசியமாக பேசுவதைவிட, ஊரக்கப்பேசுவதே மேலானது.

❖ மனிதர்கள் மற்றும் நாடுகளுக்கிடையே சிறந்த நட்புறவை வளர்க்கும்படியாக அறிவியல் வளர்ச்சி பெற வேண்டும்.

❖ மனம் எப்போதும் அறிவைச் சார்ந்திருப்பதில்லை. அறிவுதான் மனதைச் சார்ந்திருக்கிறது.

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

கல்வியங்காடு ஞானபாஸ் கரோதய சங்கத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அமரர் ஜி.ரி. ஞானசேகரவேல் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் மாபெரும் மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டி. அணிக்கு 7 பேர் 6 ஓவர்கள் கொண்டு விலகல் முறையில் நடைபெறும் இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணி கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் 077 844 8009, 077 624 7358,077 684 5389 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். (க)

# ஷாருக்கான் எடுத்தது தவறான முடிவு; அதிரடிவீரர் யுவராஜ் சிங் சுட்டிக்காட்டு



இந்தியாவில் அடுத்தாண்டு நடக்கவுள்ள ஐபிஎல் தொடருக்கான ஏலம் நடைபெறவுள்ளதால், இதற்காக கொல்கத்தா அணி தாங்களிடமிருந்த முக்கியமான வீரர்களை விடுத்த நிலையில், அதில் அவுஸ்திரேலியாவீரர் கிறிஸ் லின்னை விடுவித்தது மிகப் பெரிய தவறு என்று இந்திய அணி வீரர் யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் உள்ளூர் தொடரான ஐபிஎல் தொடர் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் அடுத்தாண்டு நடைபெறவுள்ள வீரர்களுக்கான ஏலம், அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

இதற்காக அணியில் இருக்கும் வீரர்களை விடுவிப்பது, மற்ற அணிகளிடம் வீரர்களை கொடுத்து வாங்குவது போன்ற அவகாசங்கள் கொடுக்கப்பட்டிருந்தது. அதற்கான கடைசி திகதி கடந்த 14ஆம் திகதியோடு முடிவடைந்து விட்டது.

அதன்படி கொல்கத்தா அணி சில வீரர்களை விடுவித்தது, குறிப்பாக அவுஸ்திரேலியாவின் அதிரடி வீரர் கிறிஸ் லின்னை யும் விடுத்தது. இது மிகப் பெரிய தவறு. ஷாருக்கான தவறு செய்துவிட்டார் என்று யுவராஜ்சிங் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில், அபுதாபியில் நடைபெற்று வரும் டி-10 கிரிக்கெட் தொடரில் லின் மராத்தா அரபியன்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

இதே அணியில் தான் நான் இருக்கிறேன், அவர் இப்போது இருக்கும் பார்மை பார்த்தா, ஐபிஎல் தொடரில் நிச்சயமாக சாதிப்பார் என்றே நினைக்கிறேன்.

ஆனால் அதற்கு கொல்கத்தா அணி முடிவெடுத்துவிட்டது என்று கூறியுள்ளார். (க)

# தன்னை இழிவுபடுத்திப் பேசிய வர்ணனையாளருக்கு தக்க பதிலடி கொடுத்த பார்திவ் படேல்





இந்திய அணி வீரர் பார்திவ் படேலை ஐபிஎல் தொடரில் பெங்களூர் அணி தக்கவைத்து கொண்டது தொடர்பாக அவுஸ்திரேலிய அணி முன்னாள் வீரரின் இகழ்வான பதிவுக்கு படேல் பதிலடி கொடுத்துள்ளார்.

இந்த ஆண்டு ஐபிஎல் சீசனில் பெங்களூர் அணிக்காக துடுப்பாட்டம் செய்த பார்திவ் படேல் 373 ஓட்டங்களை குவித்தார்.

அந்த அணி 5 வெற்றிகளுடன் பட்டியலில் இறுதி இடத்தை பிடித்த நிலையில், படேலின் இந்த ஓட்டங்கள் அணிக்கு, ஓரளவிற்கு நல்ல பெயரை கொடுத்திருந்தது. இந்நிலையில், அடுத்த ஆண்டு ஐபிஎல் போட்டிகளுக்காக பார்திவ் படேலை பெங்களூர் அணி மீண்டும் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இந்நிலையில் அணியின் இந்த முடிவு குறித்து அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரரும், கிரிக்கெட் நிபுணருமான டீன் ஜோன்ஸ் கேள்வி எழுப்பினார்.

அதில், அணியில் இன்னும் பார்திவ் படேலை வைத்திருக்கிறீர்களா என அவர் கேட்டிருந்தார். இதையடுத்து தன்னை இழிவுபடுத்தி பேசிய டீன் ஜோன்சினுக்கு படேல் பதிலடி கொடுத்துள்ளார்.

பெங்களூர் அணியின் இந்த தேர்வு மூலம் டீன் ஜோன்ஸ் அமைதியான முறையில் தன்னுடைய வர்ணனையை தொடர முடியும் என்று அவர் கூறியுள்ளார்.


இதுவரை 139 ஐபிஎல் போட்டிகளில் விளையாடியுள்ள 34 வயதான பார்திவ் படேல், 2,848 ஓட்டங்களை குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# வித்தியாசமான பந்துவீச்சினால் இணையத்தைக் கலக்கும் இலங்கை வீரர்



இலங்கை சுழற்பந்து வீச்சாளர் கெவின் கோத்திகோடா, தனது வித்தியாசமான பந்துவீச்சு முறையால் இணையத்தில் வைரலாகியுள்ளார்.

லசித் மலிங்க போன்ற வித்தியாசமான முறையில் பந்துவீசும் சிறந்து பந்துவீச்சாளர்களை இலங்கை உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் பட்டியலில் தற்போது இணைந்துள்ளார் 21 வயதான கெவின் கோத்திகோடா.

கலேவைச் சேர்ந்த கெவினின் பந்து வீசும் முறையை முன்னாள் தென்னாபிரிக்க சுழற்பந்து வீச்சாளர் பால் ஆடம்ஸுடன் ஒப்பிட்டுள்ளார் பயிற்சியாளர் தம்மிக சுதர்ஷனா.

அபுதாபியில் நடைபெற்று வரும் டி-10 தொடரில் பங்களா டைகர்ஸ் அணியில் கெவின் கோத்திகோடா விளையாடி வருகிறார்.

தற்போது வரை நான் ஆடம்ஸின் பந்து வீச்சை பார்த்ததே இல்லை, ஆரம்பத்திலிருந்தே நான் இவ்வாறு தான் பந்து வீசி வருகிறேன். இலங்கையின் 13, 15, 17 மற்றும் 19 வயதிற்குட்பட்டோருக்கான அணிகளில் விளையாடும் போது இவ்வாறு தான் பந்து வீசினேன்.

ஆரம்பத்தில் டென்னிஸ் பந்தில் என் தந்தையுடன் விளையாடினேன். அப்போதிலிருந்து நான் கிரிக்கெட் விளையாட தொடங்கினேன்,

அன்று முதலே இவ்வாறு தான் பந்து வீசுகிறேன் என கெவின் கோத்திகோடா தெரிவித்துள்ளார்.(க)

# ஐரோப்பிய கால்பந்து சம்பியன்ஷிப் போட்டி; சுவிட்ஸர்லாந்து- டென்மார்க் அணிகள் தகுதி



12 நாடுகளில் நடைபெறும் ஐரோப்பிய கால்பந்து சம்பியன்ஷிப் போட்டியில் சுவிட்ஸர்லாந்து மற்றும் டென்மார் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

அடுத்த ஆண்டு 2020 ஜூன் 12 ஆம் திகதி முதல் ஜூலை 12 ஆம் திகதி வரை 16வது ஐரோப்பிய கால்பந்து சம்பியன்ஷிப் போட்டி (யூரோ) (2020) நடக்க இருக்கின்றது. இதில் இதுவரை 19 அணிகள் தகுதி பெற்றுள்ளன.

இதற்கான தகுதிச்சுற்று ஆட்டங்கள் 55 அணிகள் 10 பிரிவாக பிரிக்கப்பட்டு தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் 'டி' குரூப்பில் நடந்த ஆட்டம் ஒன்றில் சுவிட்ஸர்லாந்து-ஜிப்ரால்டர் அணிகள் மோதி இதில் சுவிட்ஸர்லாந்து அணி 6-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.இதன்மூலம் சுவிட்ஸர்லாந்து அந்த பிரிவில் 5 வெற்றி, 2 சமநிலை, ஒரு தோல்வியுடன் 17 புள்ளிகள் பெற்று தகுதி பெற்றது. 4ஆவது முறையாக அந்த அணி முன்னேறி உள்ளது.

இதனைத்தொடர்ந்து டூப்ளின் நகரில் நடந்த ஆட்டத்தில் டென்மார்க்-அயர்லாந்து அணிகள் மோதி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலை ஆகி இதன்மூலம் டென்மார்க் 16 புள்ளியுடன் தகுதி பெற்று 8-வது முறையாக நுழைந்துள்ளது. மேலும் முதல் முறையாக 12 நாடுகள் இந்தப்போட்டியை நடத்துகின்றன. இந்தப்போட்டியில் மொத்தம் 24 நாடுகள் பங்கேற்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க)

## இடைக்கால அரசு இன்று பதவி...

மகிந்த ராஜபக்ஷ தலைமையில் 15 பேரைக் கொண்ட அமைச்சரவையுடன் கூடிய இடைக்கால அரசாங்கமொன்றை அமைக்க ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகுவதாக அறிவித்தது முதல் தற்போதைய அரசாங்கம் கலைக்கப்பட்டுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

புதிய பிரதமர் மற்றும் அமைச்சரவை அமைச்சர்கள் ஆகியோர் இன்று பதவியேற்கவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதன்படி, புதிய இடைக்கால அரசாங்கம் 2020 மார்ச் 2 ஆம் திகதி வரையில் பதவியில் இருக்கும் எனவும், பின்னர் பொதுத் தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்படவுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, இன்று பிற்பகல் ஒருமணிக்கு நாட்டின் பிரதமராகப் பதவியேற்கிறார்.

அத்துடன் அவர் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பிரதமர் அலுவலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று பிற்பகல் ஒரு மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ முன்னிலையில் மகிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்கிறார். அவருடன் காபந்து அரசின் அமைச்சரவையும் பதவியேற்கிறது. (ம-3)

## சஜித் இன்று விசேட...

துள்ளார்.

சஜித் பிரேமதாச இன்று ஊடகங்களை மற்றும் மக்களை சந்திப்பதற்கு எதிர்ப்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## சீனத்தூதுவரு...

தலைவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## அனைத்து ஆளு...

இதனை அடுத்து வடக்கு கிழக்கு உட்பட அனைத்து ஆளுநர்களும் தமது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதாக ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய அரசாங்கத்தின் கீழ் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட இடமளித்து அவர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. (ம-3)

## முல்லைத்தீவில்...

படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதையடுத்து, சந்தேகத்தின் பேரில் இடைக்கட்டு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர் கைப்பற்றப்பட்ட வெடிபொருள்களுடன் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-3)

## தேர்தலில் சஜித்தின் தோல்விக்கு...

இருந்தோம். மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளித்துவிட்டு மேடையேறி பிரசாரம் செய்யவில்லை. ஆனால் சஜித்திற்கு மேடை மேடையாக பிரசாரத்தில் ஈடுபட்டோம்.

இது தென்பகுதியில் மாறாக பிரசாரம் செய்யப்பட்டது. சிங்களவர்களை தோற்கடிக்க, தமிழர்களா சிங்களவர்களா என பார்க்க, தமிழர்கள் களமிறங்கியதாக அங்கு சொல்லப்பட்டது.

சஜித்தா, கோத்தபாயவா என அங்கு பார்க்கப்படவில்லை. சுமந்திரன் பேசியது கூட, சிங்களவர்களிற்கு பாடம் படிப்பிக்க வாக்களியுங்கள் என்றுதான் சிங்கள ஊடகங்களில் வந்தது. இது சிங்கள இனவாதத்திற்கு எண்ணெய் ஊற்றியது. அதனால்தான் கடினமான தோல்வியேற்பட்டது.

இன்னொரு காரணம், அவரது கட்சிக்குள்ளேயே குழப்பங்கள் இருந்தன. அவரது தலைமைத்துவமும் தேர்தலில் பெரும் பங்களிப்பு செய்ததா என்பதெல்லாம் ஆய்விற்குரியது. பல நெருக்கடிகள் அவரது தோல்விக்கு காரணமாக உள்ளது.

கட்சி வேட்பாளரை தீர்மானிக்க முன்னர், தன்னை வேட்பாளராக அறிவித்து பிரசாரங்களில் ஈடுபட்டது கூட தோல்வியின் வெளிப்பாடு தான்.

அதைவிட, உயிர்த்த ஞாயிறு தினத்தில் தமிழ் கிறிஸ்தவர்கள் மீது, சஹ்ரான் குழு நடத்திய தாக்குதல் பௌத்த இனவாத வெற்றிக்கு இடப்பட்ட அடித்தளம். பௌத்த சிங்கள மக்களிற்கு ஆபத்தென்றுதான் பிரசாரம் செய்யப்பட்டது. ஆனால் இறந்தது யாரும் பௌத்தர்கள் அல்ல. தமிழ் கிறிஸ்வர்களே. ஆனால் அப்போதே தேசிய பாதுகாப்பு என்ற உணர்வு வளர்க்கப்பட்டு, இதற்கான அடித்தளம் இடப்பட்டு விட்டது.

இதன்பின்னணியில் பல அரசியல் இருக்கலாம் ஆனால்அவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். பெற்ற வெற்றியை எல்லா இனங்களும் அனுபவிக்கக் கூடிய விதத்தில் கொண்டு செல்வதுதான் நீதியான அரசியலுக்கு உரியது என்றார். (ம-3)

## சைக்கிள் மீது கார் மோதி...

இடம்பெற்றது.

சம்பவத்தில் தனியார் வைத்திய சாலை ஒன்றில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் 45 வயதுடைய குடும்பத் தலைவர் ஒருவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்றதையடுத்து காரைச் செலுத்திச் சென்றவர் வாகனத்தை சம்பவ இடத்தில் கைவிட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று சரணடைந்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப் பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3)

## அரச உத்தியோ...

ஆளுநரின் செயலாளர்களுக்கு இந்தப் பணிப்புரை ஜனாதிபதியின் செயலாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மறு அறிவித்தல் வரை இந்தப் பணிப்புரை நடைமுறையில் இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதியின் செயலாளர், செயலாளர்கள் தமக்குக் கீழ் வரும் பணித்துறையினருக்கு இந்த பணிப்புரையை நடைமுறைப் படுத்துமாறும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3,281)

## ஜெய்சங்கர்...

கலந்துரையாடினார். அலரிமாளிகையில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பின் போது, இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து, விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரன் ஜித் சிங் சந்துவும் கலந்து கொண்டிருந்தார்.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவையும், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். (ம-3)

## பாணின் விலை...

துள்ளது.

இந்த விலை அதிகரிப்பு நேற்று புதன்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருவதாக அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

கோதுமை மாவின் விலை கிலோவுக்கு 8 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதால் இந்த விலை மாற்றம் செய்யப்படுவதாக வெதுப்பக உரிமையாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி 450 கிராம் பாண் ஒன்றின் புதிய விலை 70 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## ஜனநாயகத்தை மதிப்பதால் கோத்...

தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள ஊடக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்து நேற்று புதன் கிழமை மாலை வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே ரணில் விக்கிரம சிங்க இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த ஐந்து வருடகாலத்தில் நாட்டில் ஜனநாயகம், மனித உரிமைகளுக்கான சுதந்திரம், கருத்து வெளியிடல் மற்றும் தகவல் அறியும் உரிமை, சமத்துவம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்தோம்.

அதேபோன்று நாட்டை விரைவான அபிவிருத்திப்பாதையொன்றை நோக்கித் திருப்பினோம். அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் அனைத்து நிறுவனங்களையும் அரசியல் மயப்படுத்தப்படுவதிலிருந்து விடுவித்தோம்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமான தாகவும், சுயாதீனமானதாகவும், நியாயமாகவும் நடைபெற்றமைக்கு இதுவொரு முக்கிய காரணமாகும். எம்மால் மேற்கொள்ளப்பட்ட அந் நடவடிக்கைகளுக்கு எதிர்காலம் சாட்சியம் கூறும்.

நான் நேற்று முன்தினம் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்தேன். பாராளுமன்றத்தின் அடுத்தகட்ட செயற்பாடுகள் தொடர்பில் அவருடன் கலந்துரையாடினேன். பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நாம் கொண்டிருக்கின்ற போதிலும், கோத்தபாய ராஜபக்ஷவிற்குக் கிடைத்திருக்கும் மக்கள் ஆணையை ஏற்றுக்கொண்டு அவருக்கு வேண்டியது போன்று அரசை அமைப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று நாங்கள் தீர்மானித்தோம்.

நான் பிரதமராகப் பதவி வகித்த காலப்பகுதியில் புகழ்ச்சி மற்றும் பாராட்டுக்களைப் போன்றே, பெருமளவான விமர்சனங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. நல்லதைப் போன்றே கெட்டதையும் கேட்க வேண்டியிருந்தது. என்னைப் போற்றிய, தூற்றிய, பாராட்டிய, விமர்சித்த அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி கூறுகின்றேன். அதேபோன்று எனது உத்தியோகபூர்வப் பணிகளுக்காக ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன் என்றுள்ளது. (ம-3)

## புதிய அரசில்...

காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிஷாத் பதியூதீனுக்கோ வாய்ப்பளிக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன, மேற்படி இருவருக்கும், தமது அரசாங்கத்தில், எந்தவொரு அமைச்சுப் பதவியும் வழங்கப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார். (ம-3)

























## ஐக்கிய தேசியக் கட்சிக்குள்
# எதிர்பார்த்த மாற்றம் ஏற்படாவிட்டால் மாற்றுத்திட்டம் - ஹரின் எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எதிர்பார்த்த மாற்றம் ஏற்படாவிட்டால், மாற்றுத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டி ஏற்படும் என முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க தற்போதாவது தீர்மானம் ஒன்றுக்கு வந்தமைக்காக அவருக்கு நன்றி கூறுவதாகக் குறிப்பிட்ட ஹரின், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெறுவதற்கு எதிர்பார்த்து அவர் பயணத்தை முன்னெடுத்தால் அது சிறப்பாக அமையாது எனச் சுட்டிக்காட்டினார்.

உண்மையான இதய சுத்தியுடன் மூன்று மாதங்கள் அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கி விட்டு, பாராளுமன்றத்தில் கொண்டு வந்த அரசியலமைப்பிற்கு மதிப்பளித்து மார்ச் முதலாம் திகதி பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்ல வேண்டும்.

எனவே, அதற்கு யார் தலைமைத்துவம் வழங்க வேண்டும் என்பது தொடர்பாக தம்மிடம் நிலைப்பாடொன்று உள்ளதாக ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சிலவேளை மீண்டும் கட்சிக்குள் பல்வேறு சவால்களை விடுத்து பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கு முற்பட்டால், கட்சிக்கு மாற்றுத்திட்டமும் இல்லாமல் போய்விடும் என அவர் எச்சரிக்கை விடுத்தார்.



இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு, கட்சியை ஒன்றிணைத்து முன்னோக்கி கொண்டு வந்தவரே தகுதியானவர் எனவும் ரணில் விக்கிரமசிங்க அதற்கு வழி விடாவிட்டால், புதிய கட்சியை உருவாக்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## பிணைமுறி மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை - விமல்

மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தப் படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)


**வீடு வாடகைக்கு உண்டு**

இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் வீடு உண்டு (1118)

தொடர்பு **077 373 4136**


# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் பரமசிவம் மாஸ்ரர்
### (இ.போ.ச. சாரதி)



மூளாயை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி கனகபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பரமசிவம் மாஸ்ரர் (இ.போ.ச சாரதி) நேற்று (20.11.2019) காலமாகிவிட்டார்.

அன்னார் இராசலிங்கம் (ரத்தினம்) பொன்லஷ்மி களஞ்சியம் மூளாய் றோட், தனபாலசிங்கம் (குஞ்சன்) முத்துமாரி மாவடிச் சந்தி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனகபுரம் கிளிநொச்சியில் இன்று (21.11.2019) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கந்தன்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கனகபுரம், கிளிநொச்சி. (C-8281) தகவல்:- குடும்பத்தினர்

## மன்னாரில் கடலாமை இறைச்சியுடன் இருவர் கைது செய்யப்பட்டு
### பிணையில் விடுதலை

மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்கள பரிபாலனத்திற்கு உட்பட்ட சவுத் பார் மீன்பிடி இறங்குதுறைக்கு வள்ளம் ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட கடலாமை இறைச்சியுடன் இருவர் கடற்படையினரின் உதவியுடன் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் கனேசராஜா வழக்கை இன்று வியாழக்கிழமை வரை ஒத்திவைத்ததுடன் கைதான இருவரையும் 100000 ரூபாய் சரீர பிணையில் செல்ல அனுமதித்ததுடன் கைப்பற்றப்பட்ட அண்ணளவாக 14 கிலோகிராம் கடலாமை இறைச்சியை அழிப்பதற்கு கட்டளை பிறப்பித்தார். (ம-3)

## பாராளுமன்ற கட்சித் தலைவர் கூட்டம் இன்று

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை கொண்டு செல்வதா அல்லது ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் காபந்து அரசாங்கத்தை அமைப்பதா என்ற தீர்மானம் எடுக்கும் அவசர பாராளுமன்ற கட்சி தலைவர் கூட்டம் ஒன்று இன்று காலை சபாநாயகர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அரசாங்கத்தின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தேர்தலில் தோல்வியை சந்தித்த பின்னர் அரசாங்கத்தை கொண்டு செல்வதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை பதவிவிலக்கி விட்டு புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் காபந்து அரசாங்கம் ஒன்றினை கொண்டு செல்ல வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அது குறித்து ஆராயும்வகையில் விசேட கட்சி தலைவர் கூட்டம் இன்று காலை 11 மணிக்கு கூடுகின்றது. (ம-3)

# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி துஷ்யந்தன்

தோற்றம் 1925.07.22 மறைவு 2019.11.19



யாழ்.வல்வெட்டி பெருமையர் சிமாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி அவர்கள் 19.11.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் அன்புப் புத்திரியும் காலஞ்சென்ற செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற துஷ்யந்தனின் (R.D.O) அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் சகோதரியும் லலிதா (கொழும்பு), சிறீதரன், விஜய மாலா (அவுஸ்திரேலியா), ஜெயசீலன் (U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆறுமுகசாமி, ஜெயராஜா, சிவயோகராணி, மனோராணி ஆகியோரின் மாமியாரும் கோபிநாத், ஸ்ரீசுதர்சனி (U.K), கிரிசாந்தன் (U.K), வனிதா (U.K), தர்ஷன், அபிராமி (U.K), ஆனந்தி, ஜெயகணேசன் (கனடா), சபோசினி, வசீகரன் (கனடா), சுகன்ஜா, சுதர்ஷன் (அவுஸ்திரேலியா), சிபா, இராமநாதன் (அவுஸ்திரேலியா), லக்ஷமி, ஹரி (U.K), மீரா (U.K), நிரோஷன், வினோதா (அவுஸ்திரேலியா), லக்ஷமி, மையூரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியும் யஷ்மி, வைஷ்னி, தருண், நிதிசன், ராவின், தன்சியா, தனுஷன், ஹரினி, அபிரான், அனுஷ்கா, ஆருஷ், பிரகாஷ், மதுஷன், ஜீவன், கீர்த்தன், ரூபன், ஈசன் ஆகியோரின் பூட்டியும் புஷ்பவதி, கமலாவதி, சறோஜா, வசந்தா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2019) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வல்வெட்டி, 076 792 4718 (C-8282) தகவல்: ஆறுமுகசாமி (மருமகன்)


**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240 V2 TRAVELS (C-8115)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்.

**ராஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைகேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (1121)

FALC FRENCH LANGUAGE CENTRE

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட பிரெஞ்ச் Courses

V. Jegan (Trained in France) (C-8279)

40, பலாலி வீதி, அரியாலை. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம்: 23.11.2019 சனி 8 மணி | 181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 ஆரம்பம் 25.11.2019 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**சாவகச்சேரியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=



சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

**அருள்**

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-8255)

யாழ்.முன்னணி ஆசிரியர்கள் பங்குபெறும் க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான

**இறுதிக் கருத்தரங்கு**

**O/L - 2019**

விஞ்ஞானம் - A.சியாமளரூபன் 24.11.2019
கணிதம் - K.உமாகரன் - 24.11.2019
தமிழ் - க.மு.நிதி - 24.11.2019
காலை 8.00 - 3.00 மணிவரை

வரலாறு - J.ஜெயகணேஷ் 25,26.11.2019 பி.ப 3.00 - 6.00 மணிவரை

**Techno World** (வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி)

வெளிமாணவர்கள் அனைவரும் பங்குபெறலாம். 077 017 5346 (C-8283)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.